Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, OCTOBER 21, 2021

வியாழக்கிழமை ஒக்டோபர்21, 2021 | ஒளி: 07 கதிர் 132 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

## பெயரை மாற்றுகிறதா ஃபேஸ்புக்?

உலகின் மிகவும் பிரபலமான சமூக ஊடக வலையமைப்பான ஃபேஸ்புக், தனது பெயரை மாற்றத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஃபேஸ்புக்கின் பெயரை மாற்றுவதற்கு அந்நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான மார்க் ஸக்கர்பேர்க் திட்டமிட்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.



சமூக வலைதளங்களில் முன்னணியில் இருக்கும் ஃபேஸ்புக் நிறுவனம், இன்ஸ்டாகிராம், வாட்ஸ்அப் போன்ற நிறுவனங்களையும் தன்வசம் வைத்துள்ளது.

தொடர்ச்சி P2

குஷிநகர் விமான நிலையம் திறந்துவைப்பு

# மோடிக்கு பகவத்கீதையை பரிசளித்தார் நாமல் ராஜபக்ஷ

கௌதம புத்தர் பரிநிர்வாணமடைந்த இந்தியாவின் உத்திரபிரதேசத்தில் உள்ள குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று (20) திறந்து வைத்தார்.


இந்த விமான நிலையம் பௌத்த மதத்தவரது ஆன்மீக சுற்றுலாவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தின் துவக்க விழாவானது இலங்கையின் கொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட 100 க்கும் மேற்பட்ட பௌத்த துறவிகள் மற்றும் 12 முக்கிய பிரமுகர்களுடன் புத்தரின் புனித நினைவுச்சின்னங்களை கொண்டு சென்ற விமானம் .தரையிறங்கியதன் மூலம் ஆரம்பமாகியது.

புராதன நகரமான குஷிநகர் கௌதம புத்தரின் இறுதி ஓய்வு இடமாகும், அங்கு அவர் இறந்த பிறகு மஹாபரிநிர்வாணம் அடைந்தார்.

இந்த நிகழ்வின் விசேட அம்சமாக, இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே 2500 வருடங்களாகக் காணப்படும் நட்புறவின் அடையாளமாக,

தொடர்ச்சி P2



# கோட்டா எதிர்க்க மாட்டார்; மஹிந்த பொறுப்பேற்கவும்

### முருதெட்டுவே தேரர் கோரிக்கை



மக்களைப் போல மேன்மையான நாட்டை உருவாக்கவே நாம் விரும்பினோம். ஆனால், யாருடைய துரதிஸ்டமோ இன்று அனைத்தும் செயழிலந்துள்ளது என தெரிவித்துள்ள முருதெட்டுவே ஆனந்த தேரர், எனவே பிரதமரே இன்னும் தாமதமாகவில்லை. தேர்தலுக்கு முன்பு இந்த நாட்டை பொறுப்பு எடுங்கள்.

நான் நினைக்கிறேன் அதற்கு கோட்டாபய ராஜபக்ஷ எதிர்ப்பு தெரிவிக்கமாட்டார்.அவ்வாறு எதிர்ப்பு தெரிவித்தால் அது அவர் நாட்டுக்கு ஏற்படுத்தும் பாதிப்பு என தான் கருதுகிறேன். எனவே மஹிந்த நாட்டை பொறுப்பேற்று நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லுங்கள் என்றார்.

கொழும்பில் நேற்று(20) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# கொரோனாவின் அடுத்த அலைக்கு ஆபத்து அதிகம்



கொரோனா பரிசோதனைகளைச் செயலிழக்கச் செய்வது மற்றும் எழுமாறான மாதிரிக்கான வழிகளைத் தடுப்பதன் மூலமும், நாட்டுக்குள் வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் விமானப் பயணிகளின் பி.சி.ஆர். பரிசோதனைகளை முழுமையாக நிறுத்துவதன் மூலமும் மீண்டுமொரு கோவிட் அலை ஏற்படும் அபாயம் இருப்பதாக சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

'கொவிட்' சமூகமயமாக்கல் தொடர்பில் சுகாதார அமைச்சு இன்னும் தெளிவான அறிக்கையை இன்னும் வெளியிடவில்லை என்றாலும் நாடு சமூகமயமாக்கப்பட்ட தொற்றுநோயை எதிர்கொள்கிறது என்று தெரிவித்த அவர், விஞ்ஞான ரீதியிலான கண்காணிப்பு இல்லாமல் அதை கட்டுப்படுத்த

தொடர்ச்சி P2



## 'அச்சுறுத்தலுக்கு அஞ்சமாட்டோம்'

வா.கிருஸ்ணா

அச்சுறுத்தல்களுக்கு நாங்கள் அடிபணியாமல் எமது போராட்டத்தை முன்னெடுப்போம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளரும் அச்சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளருமான பொன்னுத்துரை உதயரூபன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வெட்கமே இன்றி சு.கவினர் அரசாங்கத்துடன் ஒட்டியுள்ளனர்

### வெல்கம தெரிவிப்பு: வெளியேற மாட்டார்கள் என்கிறார்



பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் அங்கம் வகிக்கும் 10 பிரதான பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி புறக்கணித்துள்ளார் என தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, பங்காளி கட்சிகளை ஜனாதிபதி

தொடர்ச்சி P2

## பங்காளிகளின் கோரிக்கையை ஜனாதிபதி மறுக்கவில்லை

### பிரதான பங்காளியான மைத்திரிபால தெரிவித்தார்.



தேசிய சொத்துக்களை விற்பனை செய்யும் விவகாரம் மற்றும் நியூ போட்ரஸ் நிறுவனத்துடனான திரவ எரிவாயு விநியோக ஒப்பந்தம் தொடர்பாக ஜனாதிபதியை சந்திக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட பங்காளிக் கட்சிகளின் கோரிக்கையை ஜனாதிபதி

தொடர்ச்சி P2



'சேதனப் பசளைக்கான'

## கேள்வி அதிகரிப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மீள்சுழற்சி மையத்தில் உருவாக்கப்படும் சேதனப் பசளைக்கான கேள்வி அதிகரித்துள்ளதாக, யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் ரி.ஜெயசீலன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



மாகாணங்களுக்கு இடையிலான

## பயணத் தடை 10 நாள்களுக்கு நீடிப்பு

நாட்டில் தற்போது அமுலிலுள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு எதிர்வரும் 31 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக, கொவிட்-19 தொற்றொழிப்பு ஜனாதிபதி செயலணியின் பிரதானியான இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் பயணக் கட்டுப்பாடு நீடிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார்.

அதனடிப்படையில், இன்னும் 10 நாள்களுக்கு பயணத்தடை நீடிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகள் இன்று ஆரம்பம் ; அதிபர்–ஆசிரியர்கள் 25 வருவர்

### நம்பினார் செயலாளர்: கோபமில்லை நட்பு என்கிறார்



கற்பித்தல் செயற்பாடுகளை ஆசிரியர்கள் ஆரம்பிக்கவில்லை என நாம் அவர்களுடன் கோபப்படவில்லை. அதிபர் - ஆசிரியர்களுடன் நட்புறவுடனேயே இன்றும் செயற்படுகிறாம் என தெரிவித்த கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா,

தொடர்ச்சி P2

தடுப்பூசி செலுத்திக்கொள்வதில்

## கொழும்பு மாணவர்கள் கடுமையான அக்கறை



இந்த மாதம் 15ஆம் திகதி தொடக்கம் கொழும்பு மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட உயர்தர மாணவர்களுக்கான பைஃசர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவித்த,

தொடர்ச்சி P2

## இந்தியாவில் இருந்து வந்தது நைட்ரஜன் யூரியா திரவ உரம்

### இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ பார்வையிட்டார்

இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் விவசாய உர உற்பத்தி கூட்டுறவு நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட நெனோ நைட்ரஜன் யூரியா திரவ உரத்தின் முதல் தொகையான ஒரு இலட்சம் லீற்றர், கட்டுநாயக்க பண்டாரநாயக்க



சர்வதே விமான நிலையத்தை நேற்று (20) வந்தடைந்துள்ளது.

தொடர்ச்சி P2

இளைஞர்களை அரசாங்கம்

## கடவுச்சீட்டு வரிசைக்கு இழுத்துத் தள்ளிவிட்டது



நாட்டுக்கு பெரும் பலத்தை வழங்கும் இந்த நாட்டின் இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச நாட்டின் இளைஞர் சமூகத்தை கடவுச்சீட்டு வரிசைக்கு இழுத்துத் தள்ளி, இந்த அரசாங்கம் இளைஞர்களின்

தொடர்ச்சி P2

## கடவுச்சீட்டு பெறுவதற்கான முற்பதிவுகள் இடைநிறுத்தம்

கடவுச்சீட்டு பெறுவதற்கான ஒக்டோபர் மாத முற்பதிவுகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் முற்பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



28 நாள் சிசுவுக்கும் "மிஸ் என்" தொற்றும்

## ஆபத்து என்கிறார் வைத்திய நிபுணர் விஜி திருக்குமார்

வி.ரி.சகாதேவராஜா

சிறுவர்களில் கொரோனா தொற்றுக்கு பின்னர் ஏற்படுகின்ற Mis-C பற்றி முன்னர் அறிவுறுத்தியிருந்தோம். Mis C யானது சிறுவர்களின் பல அங்கங்களில் பாதிப்பை ஏற்படுத்துவதை போன்றே Mis- N பிறந்து 28 நாள்களுக்குள்ளான சிசுகளின் பல அங்கங்களில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இது ஆபத்தானது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## நாட்டின் பொருளாதார நிலை வங்குரோத்து அடைகின்றது

### சி.வி. விக்னேஸ்வரன் எம்.பி



நாளுக்கு நாள் பொருள்களின் விலை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. விவசாயம் செய்ய முடியாத நிலையில் வீதியில் இறங்கி விவசாயிகள் போராடுகின்றனர். எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன்,

தொடர்ச்சி P2

## மோடிக்கு பகவத்கீதையை பரிசளித்தார் நாமல் ராஜபக்ஷ

பாரத தேசம் இந்த உலகிற்குத் தந்த மிகப் புனிதமான நூலான பகவத்கீதை வெளியீட்டின் முதற் பிரதி, இலங்கயின் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் மோடி அவர்களுக்கு வழங்கப்பட்டு வெளியீடு செய்துவைக்கப்பட்டது. அது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பரஸ்பர உறவை மேலும் வளர்க்கும் செயலாகும்.

இலங்கைத் திருநாட்டின் பிரதமர், மாண்புமிகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, புத்தசாசன சமய, மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பகவத்கீதை என்னும் இந்நூல் பதிப்பிக்கப்பட்டது.

பாரத தேசம் இந்த உலகிற்குத் தந்த மிகப் புனிதமான நூல் பகவத்கீதை. அந்தப் பெருமைமிகு நூலினை இலங்கையில் வாழ்கின்ற இந்துக்கள் மட்டுமல்லாது, சகல மதத்தவர்களும் அறிந்துகொள்ளவேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டதே இந்த நூல்.

இலங்கைத் திருநாட்டில் வாழுகின்ற அனைத்து மதத்தவர்களும் அறியும் வகையில் பகவத்கீதையில் அமைந்த சமஸ்கிருத சுலோகங்களை, சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அறியும் வண்ணம் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

## பெயரை மாற்றுகிறதா ஃபேஸ்புக்?

ஃபேஸ்புக் நிறுவனம் புதிய பெயரில் பெயர் மாற்றம் செய்யப்படும் என்றும், ஒற்றை தாய் நிறுவனத்தின் கீழ் ஒரு செயலியில், இன்ஸ்டாகிராம், வாட்ஸ்அப், ஒகலஸ் உள்ளிட்டவைகள் கிடைக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஃபேஸ்புக் நிறுவனத்தின் வருடாந்த மாநாடு வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், இந்த மாநாட்டில் வைத்து ஃபேஸ்புக்கின் பெயர் மாற்றம் குறித்த அறிவிப்பை மார்க் ஸக்கர்பேர்க் வெளியிட திட்டமிட்டுள்ளதாக தி வெர்ஜ் என்ற சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது

# கோட்டா எதிர்க்க மாட்டார்; மஹிந்த பொறுப்பேற்கவும்

தொடர்ந்து தெரிவித்த அவர்,

கொரோனா தொற்றை நாட்டின் முன்னேற்றத்துக்கு தடையாக தான் கருதவில்லை. ஆனால், நாட்டை வழிநடத்தும் தலைவர் அந்த தலைவருக்கு வழங்கப்படும் ஆலோசனைகளின் பலவீனத்தால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று பாரிய அபகீர்த்திக்கு உள்ளாகியுள்ளார்.

எனவே இனிமேலும் எமது நாடு உன்னதமானத என குரல் கொடுக்க கூடிய ஒருவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மாத்திரமே. ஏனெனில் அவர் மக்கள் மனங்களில் வாழ்கிறார். அவர் மக்களுடன் வாழ்கிறார் என்றார்.

ஜனாதிபதியால் இந்த பயணத்தை தொடரமுடியாது என்பது உறுதியாகியுள்ளது. அவரே அதனை சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, நாட்டை மீட்டெடுக்க, பிரதமர் மஹிந்த நாட்டை பொறுப்பேற்க வேண்டும் என்றார்.

ஜனாதிபதி மக்கள் வெறுப்புக்கு ஆளாகியுள்ளார். அவரை அவமானப்படுத்த தான் இதை சொல்லவில்லை. மக்களின் அபிப்ராயத்தை தான் இன்று முன்வருகிறேன். எப்போதும் இல்லாத வகையில் திரும்பும் திசை எங்கும் பிரச்சினை. ஒருபுறம் அதிபர்- ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு, மறுபுறம் உரப் பிரச்சினை, மேலும் பல பிரச்சினைகள்

பண்டாரநாயக்க பிரதமராக இருந்த போது நாட்டில் 460 பணிப்புறக்கணிப்புகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அது எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்த வில்லை.

ஆனால், இன்று முழுதாக நாட்டின் எதிர்காலம் பாதித்துள்ளது. நாம் பாரிய எதிர்பார்ப்பு வைத்திருந்தோம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கம் ஊடாக இந்த நாட்டை கட்டியெழுப்புவார்கள் என்று. ஆனால் இன்று 200 சதவீதம் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

இந்த நாட்டில் டீ.எஸ். சேனநாயக்க, பண்டாரநாயக்க பரம்பரை, ராஜபக்ஷ பரம்பரையினர் பாரிய சேவைகளை முன்னெடுத்துள்ளனர். ஆனால், இப்படியே பயணித்தால், ராஜபக்ஷ பரம்பரையும் இத்துடன் முடிவடைந்து விடும் என்பதே எமது அபிப்ராயமாகும் என்றார்.

# கொரோனாவின் அடுத்த அலைக்கு ஆபத்து அதிகம்

முடியாது என்றும் குறிப்பிட்டார். சில நிபுணர்கள் வேண்டுமென்றே கணிப்புகளுக்கான வழிகளைத் தடுத்துள்ளனர் என்றும் மேலும் அலைகள் ஏற்படும் என்று கணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மற்றோர் அலை ஏற்பட்டால் அத்தகைய நிபுணர்களே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

## கேள்வி அதிகரிப்பு'

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சேதனப் பசளை உற்பத்தி தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், சேதனப் பசளை உற்பத்தி என்பது, யாழ்ப்பாணம் மாநகர சபையின் மீள் சுழற்சி தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்றார்.

மிகவும் அண்மைக் காலமாக, சேதனை பசளைக்கு கேள்வி அதிகமாகக் காணப்படுவதன் காரணமாக சேதனப் பசளை உற்பத்தியை தாம் அதிகரித்துள்ளதாகவும், அவர் கூறினார்.

அண்மைய காலங்களில், மாதத்துக்கு 25 ஆயிரம் தொடக்கம் 30 ஆயிரம் கிலோகிராம் வரை, சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவித்த அவர், 'வீரியம்' என்ற பெயரில், யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான மீள்சுழற்சி மையத்தில், சேதன பசளை உற்பத்தி செய்யப்பட்டு, ஒரு கிலோகிராம் 20 ரூபாய் விலையில் விற்கப்படுகிறது எனவும் கூறினார்.

'தற்போது பெருந்தொகையானோர் இந்த எமது சேதனப் பசளையை விவசாயிகள் மற்றும் ஏனைய பொதுமக்கள் ஆர்வத்துடன் பெற்றுக் கொள்கின்றார்கள். ஆர்வமுள்ளவர்கள் மாநகர சபை மீள்சுழற்சி மையத்தில் உருவாக்கப்படும் சேதனப் பசளையை மீள்சுழற்சி மையத்திலும் மற்றும் ஏனைய திரட்டு அலுவலங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்' எனவும், அவர் தெரிவித்தார்.

## பங்காளிகளின் கோரிக்கையை ஜனாதிபதி மறுக்கவில்லை

மறுக்கவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஹோமாகமயில் நேற்று (20) இடம்பெற்ற நிகழ்வின் பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே இவ்விடயத்தை அவர் தெரிவித்தார்.

11 கட்சிகளுடன் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு அந்தந்த அதிகாரிகளுக்கு ஜனாதிபதியால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், இந்த கலந்துரையாடல் தொழில்நுட்ப விவாதமாக நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நனோ நைதரசன் உரம் தொடர்பில் வினவியபோது,விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதே இந்த சமயத்தில் அவசியம் என்றார்.

நனோ தொழிநுட்பத்திலிருந்து வரும் உரங்கள் சமீபத்திய விஞ்ஞான முறையாகும் என்றும் இது அடிப்படையில் தேவையான உறுப்புகளின் துகள்களைச் சேர்த்து, இது ஓர் அறிவியல் சமன்பாட்டால் செய்யப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

மேலும், இந்த நேரத்தில் விவசாய சமூகம் பயிர் செய்ய ஏதாவது தீர்வு காணப்பட்டால் நல்லது என்றும் அதுதான் தேவை என்றும் குறிப்பிட்டார்.

அரிசி மற்றும் சீனி விலை கடுமையாக உயர்ந்து வருகிறது என்று வினவியதற்கு, அதுதான் சந்தை நிலவரம் என்றும் அவை ஏறி இறங்கும் என்றும் தெரிவித்தார்.

## 'அச்சுறுத்தலுக்கு அஞ்சமாட்டோம்'

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, கிழக்கில் உள்ள மண் மாபியாக்களை கட்டுப்படும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டுமேயொழிய, அதிபர் மற்றும் ஆசிரியர்களை அச்சுறுத்தக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று (20) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பான சாத்வீகபோராட்டம், 100ஆவது நாளை அண்மித்துள்ள நிலையில், எமது போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

## வெட்கமே இன்றி சு.கவினர் அரசாங்கத்துடன் ஒட்டியுள்ளனர்

புறக்கணிப்பது ஒன்றும் புதிதல்ல என்றார்.

பங்காளி கட்சியின் தலைவர்கள் அரசாங்கத்தில் மூன்றாம் தரப்பினரை போன்று செயற்படுகிறார்கள். தம்மை தெரிவு செய்த மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து இவர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேறி எதிர்க்கட்சியினராக செயற்பட வேண்டும்.

ஆனால் அவர்கள் அவ்வாறு அரசாங்கத்தில் இருந்து ஒருபோதும் வெளியேறமாட்டார்கள். மக்களின் நிலைப்பாட்டை காட்டிலும் அவர்களுக்கு தங்களின் சுய தேவைகள் மாத்திரம் முக்கியமானதாக உள்ளது என்றார்.

பங்காளி கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுப்படுவது பயனற்றது என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி உள்ளார். பங்காளி கட்சிகளின் ஆதரவு இருந்தாலும்,இல்லாவிட்டாலும்,அரசாங்கத்தை முன்னெடுத்து செல்ல முடியும்.என்ற உறுதியான நிலைப்பாட்டில் ஜனாதிபதி,உட்பட அரசாங்கத்தின் முக்கிய தரப்பினர்கள் உள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கு எதிராக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைக்கிறார்கள்.சுதந்திர கட்சியின் கொள்கையை அவமதிக்கும் வகையில் கருத்துரைக்கிறார்கள். வெட்கமில்லாமல் சுதந்திர கட்சியினர் தொடர்ந்து அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து செயற்படுகிறார்கள் என்றார்.

## கொழும்பு மாணவர்கள் கடுமையான அக்கறை

சுகாதார அமைச்சின் பாடசாலைகள் சுகாதார அலுவலகத்தின் பொறுப்பதிகாரி விசேட வைத்தியர் டி.எம். ஜயலத் , இதுவரை கொழும்பில் 8 பாடசாலைகளில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று (20) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இந்த வருடம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மிகுந்த அக்கறையுடன் தடுப்பூசி செலுத்திக்கொண்டாலும் கடந்தாண்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் குறைந்த எண்ணிக்கையினரே தடுப்பூசி செலுத்திக்கொள்ள வருகின்றனர். இதற்கான காரணம் அவர்கள் வேறு எங்காவது தடுப்பூசி செலுத்தியிருக்கலாம் அல்லது அவர்கள் வெளிநாடுகளில் கற்றல் செயற்பாடுகளுக்கு சென்றிருக்கலாம் என்றார்.

## இந்தியாவில் இருந்து வந்தது நைட்ரஜன் யூரியா திரவ உரம்

இவ்வாறு கொண்டுவரப்பட்டுள்ள குறித்த உர தொகை அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை உள்ளிட்ட பெரும்போக செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் உள்ள விவசாய அபிவிருத்தி மத்திய நிலையங்களின் ஊடாக விவசாயிகளுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வாரத்தினுள் மாத்திரம் 5 இலட்சம் லீற்றர் நெனோ நைட்ரஜன் யூரியா திரவ உரத்தை நாட்டுக்கு கொண்டுவருவதற்கு தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றாடலுக்கு இணைவான விவசாயம் எனும் ஜனாதிபதியின் கருத்திட்டத்திற்கு ஏதுவாக பெரும்போக செய்கையில் சேதனப் பசளையைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானத்திற்கு அமைய இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ பார்வையிட்டார்.

## பாடசாலைகள் இன்று ஆரம்பம் ; அதிபர்–ஆசிரியர்கள் 25 வருவர்

அவ்விருசாராரும் பாடசாலைகளுக்கு 25ஆம் திகதி கண்டிப்பாக வருவார்கள் என தனக்கு நம்பிக்கையுள்ளது என்றார்.

இன்று (21) பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் ஆசியர்கள் அதிபர்கள் வருகைத் தரமாட்டார்கள் என்ற நிலையில், பாடசாலகயை ஆரம்பித்து செயற்படுவதற்கான வேலைத்திட்டங்களை ஏற்படுத்தி உள்ளோம் என்றார்.

தனியார் தொலைக்காட்சியில் நேற்று (20) இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொலுரே 21ஆம் திகதி ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்காவிட்டால், அவர்களுக்கான அடுத்த மாத கொடுப்பனவை இரத்துச் செய்வதாக தெரிவித்துள்ள நிலையில், ஆளுநர் ஒருவருக்கு இவ்வாறான அதிகாரம் உள்ளதா, அதிகாரம் பகிரப்பட்டுள்ளதா என கல்வி அமைச்சின் செயலாளரிடம் வினவப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர்,

ஆளுநர் ராஜா கொல்லுரேயின் கருத்தை தான் அவதானிக்கவில்லை என தெரிவித்த அவர், தற்போது மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ளதால், அவை அனைத்தும் மாகாண சபைகளுக்கு கீழான பாடசாலைகள் என்பதால் ஆளுநருக்கு அதிகாரம் இருக்கலாம். 13ஆவது திருத்தத்துக்கு அமைய ஆளுநருக்கே அதிகாரம் உள்ளது என்றார்.

## கடவுச்சீட்டு பெறுவதற்கான முற்பதிவுகள் இடைநிறுத்தும்

கடந்த சில நாள்களாக கடவுச்சீட்டு பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக இந்த மாதத்துக்கான முற்பதிவுகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளதாக திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

திர்வரும் நவம்பர் மாதம் முதல் கடவுச்சீட்டுகளைப் பெறுவதற்கான தினங்கள் மற்றும் நேரங்களை பொதுமக்கள், முற்பதிவு செய்து கொள்ளமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் திகதி மற்றும் நேர முற்பதிவு வசதியின் கீழ், கடந்த சில

## நாட்டின் பொருளாதார நிலை வங்குரோத்து அடைகின்றது

நாட்டின் பொருளாதார நிலைமை வங்குரோத்து அடைகின்றது என்றார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று (20) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை ஒரு விவசாய நாடு விவசாயிகளுக்கு தேவையான உரங்களை பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால் எந்தவிதமான மாற்று ஏற்பாடுகளும் இல்லாமையினால், விவசாயிகளை இந்த அரசாங்கம் வீதிக்கு இறக்கிவிட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்த மாற்று உரத்துக்கான விளைச்சல் அதிகளவு கிடைக்குமா என்பது சந்தேகமானது என்றார்.

## கடவுச்சீட்டு வரிசைக்கு இழுத்துத் தள்ளிவிட்டது

வாழ்க்கையுடன் விளையாடுவதாகத் தெரிவித்தார்.

தொம்பே பிரதேசத்தில் நேற்று (20) இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்கவுள்ள இளைஞர் சமூகத்தின் எதிர்பார்ப்புகளை ஏமாற்றமடையச் செய்து, எதிர்காலம் தொடர்பில் அவர்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்திய பின்னர், அவர்கள் எவ்வாறு நாட்டில் இருப்பார்கள் என்றார்.

எவருக்கும் எவ்வித பிரச்சினையும் இல்லாமல், தமத பலத்தில் இந்த நாட்டுக்கு உணவு வழங்கிய விவசாயிகள், அரசாங்கத்தின் தன்னிச்சையான பிடிவாதத்தால் பாதாளத்துக்குள் தள்ளியுள்ளதாகத் தெரிவித்த அவர், விவசாயிகளின் உற்பத்திகளுக்கு பாதிப்பு ஏற்பட்டால், அவர்களுக்கு இழப்பீடு வழங்குவதாக அரசாங்கம் இன்று அறிவித்தாலும் குறைந்தது பல மாதங்களாக வீதிகளில் நிற்கும் அதிபர்- ஆசிரியர்களின் சம்பள பிரச்சினைக்கு தீர்வை வழங்க முடி யவில்லை இழப்பீடையும் எவ்வாறு வழங்குவார்கள் என கேள்வி எழுப்பினார்.

## ஆபத்து என்கிறார் வைத்திய நிபுணர் விஜி திருக்குமார்

இது தொடர்பில், கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஸ்ட விரிவுரையாளரும்,மட்/போதனா வைத்தியசாலையின் விசேட குழந்தை நல வைத்திய நிபுணருமான வைத்திய கலாநிதி வைத்தியர் .விஜி திருக்குமார் மேலும் தெரிவிக்கையில்,

சமகாலத்தில் குழந்தைகளைப் பாதிக்கும் "மிஸ்சி "பற்றி அறிந்துகொள்வதற்கு இடையில், "மிஸ்என்" என்ற புதியவகைத்தொற்றும் தாக்கம் செலுத்த ஆரம்பித்துள்ளது .

MIS – N (Neonatal Multisystem Inflammatory Syndrome) என்பது அதன் விரிவாக்கம்.

கொவிட் - 19 தொற்றுக்கு உள்ளான தாயின் தொப்புள் கொடியின் மூலமாக கடத்தப்படுகின்ற பிறபொருள் எதிரி அல்லது நிணநீர் தொழிற்பாட்டின் பிறழ்வு செயற்பாடு குழந்தைகளின் உடலில் பல அங்கங்களில் பிறந்து 28 நாள்களுக்குள் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இதன் மூலமாக பிள்ளைகளின் .இதயம் பெரும்பாலான (90%) தாக்கத்தை (இதய தொழிற்பாடு இதய குழாய்கள்) ஏற்படுத்துகிறது.

நுரையீரல் , சுவாசப் பிரச்சினைகள், காய்ச்சல், பாலூட்டலில் சிரமம், சிறுநீரக செயலிழப்பு, கல்லீரல் பிரச்சினைகள், பிள்ளை சோர்வாக காணப்படல், பிள்ளை மஞ்சளாகி காணப்படல் உள்ளிட்டவற்றை அவதானிக்க முடிவதுடன் சிறு சதவீதமான உயிரிழப்பும் அவதானிக்கப்படுகிறது என்றார்.

சிறு பிள்ளைகளில் குறிப்பாக 28 நாள்களுக்கு உட்பட்டவர்களின் உடல் நிலையில் மேலதிக கவனம் எடுத்து பார்ப்பதுடன் பிள்ளைகளின் உடல் நிலையில் ஏதேனும் அசௌகரியத்தை அவதானித்தால் அரச வைத்தியசாலைகளை அணுக வேண்டும் என்றார்.

சம்பளத்தை நிறுத்தினால்

# முற்றுகையிடுவோம்

## அதிபர் சங்கம் கடும் எச்சரிக்கை



வடமேல் மாகாணத்தில் பாடசாலைகளுக்கு இன்று (21) சமூகமளிக்காத ஆசிரியர்களின் நவம்பர் மாத சம்பளத்தை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாக இருந்தால், அனைத்து ஆசிரியர்களும் அதிபர்களுடன் வடமேல் மாகாண ஆளுநரின் அலுவலகத்தை முற்றுகையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை அதிபர் சங்கம் எச்சரித்துள்ளது.

நாத்தாண்டிய பிரதேசத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அச்சங்கத்தின் செயலாளர் பியசிறி பெர்ணான்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் நாடு முழுவதிலும் பரவ ஆரம்பித்ததாலேயே பாடசாலைகளை அரசாங்கம் மூடியது. மாறாக, அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டால் அல்ல; பாடசாலைகள் மூடப்பட்டிருந்த காலத்தில் ஆசிரியர்கள் தங்களது சொந்தப் பணத்தை செலவிட்டு மாணவர்களுக்கு கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தனர்.

சில ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தேவையான இணைய டேட்டாக்களையும் தங்களது சொந்தப் பணத்தில் வாங்கிக் கொடுத்தனர். இவ்வாறான நிலையில், இன்று பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ள நிலையில் பெரும்பாலான ஆசிரியர், அதிபர்கள் சேவைக்கு திரும்பப்போவதில்லை.

இவ்வாறான நிலையில், தான்தோன்றித்தனமாகவும் அரசியற் தீர்மானங்களையும் ஆளுநர்களால் எடுக்க முடியாது. இன்று பாடசாலைகளுக்கு சமூகமளிக்காத ஆசிரியர்களின் சம்பளத்தை நிறுத்துவதற்குப் பதிலாக, வடமேல் மாகாண ஆளுநர் செய்ய வேண்டிய பல வேலைகள் இருக்கின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

# 18 வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கு மரணதண்டனை இனி இல்லை

## சபைக்கு வருகிறது சட்டமூலம்



பாராளுமன்றத்தின் இன்றைய அமர்வில், இரு திருத்தச் சட்டமூலங்கள், ஒரு ஒழுங்குவிதி ஆகியவற்றை நீதி அமைச்சர் அலி சப்ரி சமர்ப்பிக்கவுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற நீதி அமைச்சு சார் ஆலோசனைக் குழுவில் இதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) (திருத்தச்) சட்டமூலம், தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 214 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 840 ஆம் பிரிவின் கீழ், நீதி அமைச்சரால் 2021ஆண்டு ஜுலை 02ஆம் திகதி வெளியிடப்பட்ட 2234/67 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி என்பன விவாதத்தின் பின்னர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளன.

இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) (திருத்தச்) சட்டமூலத்தின் ஊடாக, முதலில் வகுக்கப்பட்டிருந்த 18 என்ற வயதெல்லை 18-22 எனத் திருத்தப்படுகிறது. பாலியல் நடுநிலையைப் பேணுவதும் இச்சட்டத் திருத்தத்தின் நோக்கமாகும். தண்டனைச் சட்டக்கோவையில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தத்தின் ஊடாக 18 வயதுக்கு உட்பட்ட ஆளுக்கெதிராக மரண தண்டனை வழங்குவதற்குப் பதிலாக, தடுத்து வைத்தல் ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

# வெளிவிவகார அமைச்சரை சந்தித்தார் பிரான்ஸ் தூதுவர்



இலங்கையில் உள்ள பிரான்ஸ் தூதுவர் எரிக் லாவெர்டு, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை மரியாதை நிமித்தமாக சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையேயான பலதரப்பட்ட ஒத்துழைப்பு, நட்புறவை இரு தரப்பினரும் வரவேற்றதுடன், இருதரப்பு உறவுகளையும் மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினர்.

இருதரப்பு அரசியல் உறவுகள், பாராளுமன்றங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு, இருதரப்பு வர்த்தக விரிவாக்கம், முதலீடு, சுற்றுலா, கல்வி, பலதரப்புத் துறைகளிலான பரஸ்பர ஆர்வம் சார்ந்த விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டு உள்ளன. கொழும்புக்கும் பரிஸுக்கும் இடையேயான நேரடி விமான சேவை, மீண்டும் தொடங்கப்படுகின்றமை இதன்போது வரவேற்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் செயற்பாடுகள் அனைத்தும்

# விரைவில் கணினி மயப்படுத்தப்படும்

■ என்.ராஜ்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் செயற்பாடுகள் அனைத்தும், விரைவில் கணினி மயப்படுத்தப்படும் என, யாழ் மாநகர மேயர் வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் உத்தியோகபூர்வ அலுவலக இணையத்தளம், யாழ்ப்பாண பொதுநூலக கேட்போர் கூடத்தில் வைத்து, நேற்று (20) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாநகர ஆணையாளரால், இந்த இணையத்தளம் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது

இந்நிகழ்வில், யாழ். மாநகர சபை உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ். மாநர சபை தொடர்பான சகல தகவல்களையும் சேவைகளையும் பொதுமக்கள், இந்த இணையதளத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், யாழ். மாநகர சபையின் செயற்பாடுகளை முற்றுமுழுதாக இணையவழிமூல கணினி மயப்படுத்தப்பட்ட வேண்டும் என்பதே தன்னுடைய இலக்கு என்றார்.

அந்த இலக்கை நோக்கிய பயணத்தில் மிக காத்திரமான பணியின் ஒரு பகுதியை இன்று நாங்கள் அடைந்துள்ளோம் எனவும், மேயர் கூறினார்.

அத்துடன், எதிர்காலத்தில், யாழ். மாநகர சபையின் செயற்பாடுகள் அனைத்தும் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டு, இணையத்தின் ஊடாக, பொதுமக்கள் தமது சேவையை வீட்டில் இருந்தே பெற்றுக் கொள்ளக் கூடியவாறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

அதற்குரிய வேலைத்திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆரம்பிக்கப்பட்டுள்ள இணையத்தளமானது, பொதுமக்கள் தமக்குரிய சேவையை வீடுகளில் இருந்தவாறே இணையத்தினூடாக தமக்குரிய முழுமையான சேவைகளைப் பெறக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, தமது பதவிக் காலம் விரைவில் முடிந்து விட்டாலும், எதிர்வரும் காலத்தில் இந்த மாநகர சபையை பொறுப்பேற்கும் நிர்வாகமானது, முழுமையாக இணைய மயமாக்கப்பட்ட மாநகர சபையாக பொறுப்பேற்கும் எனவும், மேயர் தெரிவித்தார்.



# சபைக்கு இன்று வருகிறார் ஜனாதிபதி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இன்றையதினம் (21) இடம்பெறவுள்ள பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதியின் அட்டவணையில் இந்த விடயம் குறிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த ஜனாதிபதி செயலக ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க, எனினும், சூழ்நிலைக்கு ஏற்ப அது மாறலாம் என்றார்.

ஜனாதிபதியின் திட்டமிடப்பட்ட வருகைக்கு பின்னால் எவ்விதக் காரணமும் இல்லை என்று அறியமுடிகிறது.

பொது விவாதங்கள் நடக்கும்போது, ஜனாதிபதி பங்கேற்க வேண்டும் என்று எவ்வித சிறப்புக் காரணமும் இல்லை. குறிப்பாக இந்த நாள்களில் வரவு- செலவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன என்று கிங்ஸ்லி ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, வழக்கமான நெறிமுறையின்படி அனைத்து எம்.பி.க்களும் இன்றைய அமர்வுகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

# “பொருட்களின் விலை அதிகரிப்பை ஏற்கின்றோம்”



ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல, விரைவாக புதிய அரசியலமைப்பை கொண்டுவர உள்ளோம். பொருட்களின் விலைகள் அதிகரிப்பை ஏற்றுகொள்கிறோம் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் விலைவாசி அதிகரிப்பு உள்ளிட்ட இன்றைய நெருக்கடி நிலைமைகள் அனைத்தும் தற்காலிகமானவை. டொலர்களை இலங்கையில் அச்சிட முடியாது. இந்தத் தொற்று நோயால், ஒரு பெரிய நெருக்கடியை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. வெளிநாட்டவர் வருகை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனூடாக பில்லியன் கணக்கான டொலர் நாட்டுக்கு வருவது தடைப்பட்டுள்ளது.

இந்த நிலைமையை அரசாங்கம் கவனமாகக் கையாண்டு வருகிறது. மக்களை பட்டினியில் வாடவிடவில்லை. பொருட்களின் விலை அதிகரிப்பை ஏற்றுகொள்கிறோம். இவை அனைத்தும் தற்காலிகமான விடயங்களே! கடந்த அரசாங்கத்தைப்போல, இந்த அரசாங்கம் மக்களைச் சுரண்டாது என்று நாங்கள் தெளிவாக கூறுகிறோம். இந்த அரசாங்கத்தின் தலைவர், மத்திய வங்கியில் இருந்து பணத்தைத் திருடவில்லை.

> “நிலைமையை அரசாங்கம் கவனமாகக் கையாள்கிறது. மக்களை பட்டினியில் வாடவிடவில்லை. பொருட்களின் விலை அதிகரிப்பை ஏற்றுகொள்கிறோம்

எதிர்க்கட்சிகளுக்குத் தான் பஞ்சம் வரும். நாட்டில் பஞ்சம் வராது. ஜே.வி.பி விவசாயிகளை கொன்ற கட்சி. ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தில் உள்ளதைபோல, புதிய அரசமைப்பை உருவாக்க உள்ளோம். கடந்த ஒன்றரை வருடங்களாக அரசாங்கத்தால் அதனை செய்ய முடியாமல் போயிருந்தாலும் விரைவாக அதனை செய்ய உள்ளோம்.

# சி.ஐ.டியில் முறைப்பாடு செய்தது ஜே.வி.பி



மக்கள் விடுதலை முன்னணியை இலக்குவைத்து, அரசாங்கத்துடன் தொடர்புடையவர்கள் சமூக வலைத்தளங்களில் போலியான செய்தி ஒன்றை பதிவிட்டதாகத் தெரிவித்து நேற்று முன்தினம் (19) குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் மக்கள் விடுதலை முன்னணி, முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைத்துவ மேம்பாட்டுக்காக, கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிட்டதாக சமூக வலைத்தளங்களில் பரப்படும் செய்தி தொடர்பிலேயே அக்கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தியால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக, பத்திரிகைப் பேரவை தலைவரின் முகநூல் பக்கத்திலேயே இந்த விடயம் பிரசாரம் செய்யப்பட்டுள்ளது. எனவே, இது அரசாங்கத்தின் வங்குரோத்து நிலையை வெளிக்காட்டுகின்ற மற்றுமொரு தருணமே எனவும் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், மக்களுக்கு அரசாங்கம் மீது வெறுப்பு ஏற்பட்டுவிட்டது என்பதால் அதனை விளங்கிக் கொண்ட பெரும்பாலானோர் தற்போது மக்கள் விடுதலை முன்னணியுடன் ஒன்றிணைந்து வருகிறார்கள். இவ்வாறான நிலையில் சமூகவலைத் தளங்கள் ஊடாக எமக்கு எதிராக சேறு பூசப்படுகிறது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனவும் தெரிவித்துள்ளார்.

# சிறுநீரகம் தேவை



பாதுக்க, இங்கிரிய வீதி, இலக்கம் 37/28 என்கிற முகவரியைச் சேர்ந்த காமினி செனவிரத்ன என்பவர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு ஓ பொசிட்டிவ் சிறுநீரகம் பொருத்த முடியும் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சிறுநீரகம் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ஏ.எல்.எம்.நசார் தெரிவித்துள்ளார்.

காமினி செனவிரத்னவுக்கு சிறுநீரகங்களை வழங்க எவராவது விரும்பினால் 0711241787, 0718585512 என்கிற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ள வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

# பூரணையில் மது விற்பனை

## பெண் உட்பட இருவர் கைது

■ கனகராசா சரவணன்

பூரண தினத்தில் இரு வீடுகளில் சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவர் உட்பட இருவரை, மட்டக்களப்பு, வவுணதீவில் நேற்று (20) கைதுசெய்துள்ளதாக, வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசாந்த அப்புகாமி தெரிவித்தார். இவர்களிடமிருந்து 12 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

விசேட புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து, சம்பவதினமான நேற்றுக் காலை நெடுஞ்சேனை பிரதேசத்தில் வெவ்வேறு இரு வீடுகளை பொலிஸார் முற்றுகையிட்டனர்.

இதன்போது சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட 18 வயது இளைஞனை 7 போத்தல்கள் கொண்ட 5,250 மில்லி லீற்றர் மதுபானத்துடன் கைதுசெய்தனர்.

அதேவேளை, 43 வயதுடைய பெண் ஒருவரை 5 போத்தல்கள் கொண்ட 3,750 மில்லி லீற்றர் மதுபானத்துடன் கைது செய்துள்ளதாகவும் வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

# கடலில் மூழ்கியவரை காப்பாற்ற சென்றவர் உயிரிழப்பு

## மாரவிலவில் பெரும் சோகம்

■ ரஸீன் ரஸ்மின்

மாரவில, மூதுகட்டுவ கடலில் மூழ்கிய சிறுவனை காப்பாற்றச் சென்று காணாமல்போயிருந்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கொபேஹின்ன பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக நேற்று (20) மீட்கப்பட்டுள்ளார்.

திங்கட்கிழமை (18) பிங்கிரிய பகுதியிலிருந்து மாரவில பிரதேசத்துக்கு சுற்றுலா நிமித்தம் வருகை தந்த சிலர், மூதுகட்டுவ பிரதேசத்திலுள்ள கடலுக்கு நீராடச் சென்றுள்ளனர்.

இவ்வாறு கடலில் நீராடிக்கொண்டிருந்தபோது, சிறுவன் ஒருவன் கடலில் மூழ்கி, திடீரென காணாமல் போனதையடுத்து, சிறுவனின் பெற்றோர் கூக்குரலிட்டுள்ளனர்.

> “சில மணி நேரத்தின் பின்னர் கடல் நீரில் இழுத்துச் செல்லப்பட்ட சிறுவன் பத்திரமாக மீட்கப்பட்டார். சிறுவனை மீட்பதற்காகச் சென்றவர்களில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடலில் மூழ்கி காணாமல் போயிருந்தார்

இதனையடுத்து, அங்கு நின்றவர்கள் கடலுக்குள் சென்று, குறித்த சிறுவனை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். எனினும், சில மணி நேரத்தின் பின்னர் கடல் நீரில் இழுத்துச் செல்லப்பட்ட சிறுவன் பத்திரமாக மீட்கப்பட்டார். சிறுவனை மீட்பதற்காகச் சென்றவர்களில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடலில் மூழ்கி காணாமல் போயிருந்தார்.

இவரை கடந்த இரு நாள்களாகத் தேடி வந்த நிலையில், சடலமாக நேற்று (20) அவர் மீட்கப்பட்டுள்ளார்.

இந்திய மீனவர்களுக்கு எதிரான

# ‘போராட்டம் ஏற்புடையதல்ல’

■ செந்தூரன் பிரதீபன்



இந்திய மீனவர்களுக்கு எதிரான போராட்டம் நடத்துவது என்பதும் அதற்கு எதிராக போர்க்கொடி உயர்த்துவது என்பதும் ஏற்புடையது அல்ல என, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

பேசி தீர்க்கப்பட வேண்டிய ஒரு விடயத்துக்கு தமிழக மீனவர்களுக்கு எதிரான போராட்டம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று எனவும், அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில், நேற்று முன்தினம் (19) மாலை, நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், எல்லா மீனவர்களும் எங்கே மீன்வளம் இருக்கின்றதோ அந்த மீன் வளத்தை தேடிப் போவது என்பது இயற்கையான ஒன்று என்றார்.

இப்பொழுது இந்திய அரசாங்கத்துக்கு எதிராக, மீனவர்களுக்கு எதிராக போராட்டங்கள் நடத்துவது என்பது, சரியான வழிமுறை அல்ல எனத் தெரிவித்த அவர், தாங்கள் பாரிய ஒரு போராட்டத்தை நடத்த உதவி ஒத்தாசையாக இருந்தது தமிழகம் எனவும் கூறினார்.

‘தமிழகத்தில், இலட்சக்கணக்கான எங்களுடைய மக்கள் எதிலிகளாக போயுள்ளனர். அவர்களை பராமரிப்பது தொடக்கம் அனைத்து தேவைகளையும் தமிழக அரசே மேற்கொண்டு வருகின்றது. ஆனால் இங்கே சில அசம்பாவிதங்கள் நடப்பது என்பது உண்மை. ஆனால் அதை பேசி தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள். இந்திய அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் ஒரு பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு கண்டு, சுமூகமான முறையில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்றும், அவர் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களை எமது தொழிலாளர்கள் தாக்குவது, எமது மீனவர்களை இந்திய தொழிலாளர்கள் தாக்குவது ஏற்புடைய ஒரு விடயமல்ல எனத் தெரிவித்த அவர், தற்போதுள்ள மீன்பிடித்துறை அமைச்சரும் அவர் சார் அதிகாரிகளும் ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள் என்று ஒரு சந்தேகம் தங்களுக்கு தோன்றுவதாகவும் கூறினார்.

‘தென்பகுதி மீனவர்கள் தங்கி நின்று மீன்பிடி நடவடிக்கையில் மேற்கொள்கின்றார்கள். அதற்கு எதிரான எந்தத் தரப்பிலிருந்தும் எந்த அரசியல்வாதியும் போராட்டங்களை மேற்கொண்டதில்லை. அதேபோல், தென் பகுதியில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்தில், சிங்கள மீனவர்கள் குடியேற்றம் செய்யப்படுகின்றனர். அதற்கு எதிராக எங்களுடைய அரசியல் வாதிகள் யாராவது போராட்டம் மேற்கொண்டார்களா? அவ்வாறான விடயங்கள் எதுவும் நடக்கவில்லை’ என்றும், சுரேஷ் கூறினார்.

புலனாய்வு உத்தியோகத்தர்களை பிரதேச செயலகங்களுக்கு

# மீள நியமிக்க கோரிக்கை

■ அஸ்லம் எஸ்.மௌலானா



மாவட்டச் செயலகங்களில் இணைப்புச் செய்யப்பட்டிருக்கும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு விசாரணை உத்தியோகத்தர்களை மீளவும் பிரதேச செயலகங்களுக்கு நியமிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தென்கிழக்கு சமூக அபிவிருத்தி மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி, வர்த்தக, வாணிப அமைச்சர், பாவனையாளர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ஆகியோருக்கு கடிதங்களை அனுப்பி வைத்திருப்பதாக மன்றத்தின் செயலாளரும் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளருமான ஏ.எல். முகம்மது முக்தார், நேற்று (20) தெரிவித்தார்இ

து குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

“2018ஆம் ஆண்டு, அமைச்சரவை, முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் திறைசேரி என்பவற்றின் அனுமதியுடன் பிரதேச செயலக மட்டத்தில் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன், நாடளாவிய ரீதியில் சுமார் 200க்கு மேற்பட்ட புலனாய்வு விசாரணை உத்தியோகத்தர்கள், வர்த்தக அமைச்சால் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

“இந்த நியமனம், நிபந்தனைகளுக்கு முரணான வகையில் திடீரென மாவட்டச் செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டு, அங்கிருந்து கடமை செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக அவர்களது புலனாய்வுப் பணிகளை சுதந்திரமாக செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது.

“தற்போதைய கொவிட் பெருந்தொற்று அசாதாரண சூழ்நிலையில், வர்த்தகர்கள் தாம் நினைத்தவாறு பொருள்களின் விலையை அதிகரித்து விற்பனை செய்வதற்கும் கறுப்பு சந்தை, பதுக்கல் வியாபாரம் என்பவற்றில் ஈடுபடுவதற்கும் பிரதான காரணம் யாதெனில், பிரதேச செயலக மட்டத்தில் பொறுப்புக்கூற வேண்டிய பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகள் இல்லாமல் போனமையேயாகும்.

“பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர்களின் நேரடி கண்காணிப்பு, பிரதேச மட்டத்தில் இருந்தால்தான் வணிகக் கொள்ளைகளைத் தடுக்க முடியும்.

“இதேவேளை, இவ்வுத்தியோகத்தர்கள் பலர் இதுவரை சேவையில் நிரந்தரமாக்கப்படாமல் இருந்து வருவதுடன், அடிக்கடி இடமாற்றத்துக்கும் உட்பட்டு வருவதன் காரணமாக அதிகமான பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரிகள் தமது பதவிகளை விட்டுச் சென்றுள்ளனர் எனவும் தெரிய வருகிறது.

“ஆகையால், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அனைத்து புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படுவதுடன், அவர்களது சேவையை பிரதேச செயலக மட்டத்தில் முன்னெடுப்பதற்கு அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறித்த கடிதங்களில் வலியுறுத்தியுள்ளோம்” என்றார்.



## அரச இலட்சினையை தவறாக பயன்படுத்தியவர் கைது

■ கெ. கீதாஞ்சன்

புதுக்குடியிருப்பில், அரச இலட்சினையை தவறாக பயன்படுத்தி, வாகன இலக்கத்தகடு அச்சிட்ட வணிகர் ஒருவரை, விசேட அதிரடிப்படையினர், நேற்று முன்தினம் (19) கைதுசெய்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு சிவநகர், 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபர் ஒருவரே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் இருந்து, தவறாக அச்சடிக்கப்பட்ட இலட்சினைகள், அதற்காக பயன்படுத்திய பொருள்கள், வான இலக்கத் தகடுகள் என்பவற்றை, விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளார்கள்.

கைதுசெய்யப்பட்ட நபர், சான்று பொருள்களுடன், முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு, முல்லைத்தீவு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



## கௌரவிப்பு...

■ எஸ். தில்லைநாதன்





யாழ்ப்பாணம் - கோண்டாவிலைச் சேர்ந்த நாதஸ்வர இசைக் கலைஞன் கே.பி குமரன், திங்கட்கிழமை (18) இரவு, சாவகச்சேரி - சங்கத்தானை இராக்கச்சி அம்மன் தேவஸ்தானத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டார்.

வெகுவிரைவில் திரைக்கு வரவிருக்கும் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் அண்ணாத்த திரைப்படப் பாடலொன்றுக்கு இமான் இசையமைப்பில் நாதஸ்வர இசை வழங்கியமைக்காக, கே.பி. குமரனுக்கு, சங்கத்தானை நாதஸ்வரக் கலைஞர்கள் கௌரவிப்பளித்தனர்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் கலந்துகொண்டு, நாதஸ்வரக் கலைஞன் குமரனை கௌரவித்தார்.

காணாமல்போன

## இந்திய மீனவர் சடலமாக மீட்பு

■ செந்தூரன் பிரதீபன்

நேற்று முன்தினம் (19), கடற்படையினரின் படகு மோதி கடலில் மூழ்கி காணாமல் போன மீனவர், சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக, ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மீனவரின் சடலம், காரைநகர் - கோவளம் கடலில் இருந்து, நேற்று (20) மீட்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர், புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த ராசு ரஜிகரன் (வயது 27) என்பவர் ஆவார்.

குறித்த மீனவரின் சடலம், தற்போது காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

ஏற்கெனவே கடற்படையின் படகுடன் மோதிய இந்திய மீனவர் படகிலிருந்து கைது செய்யப்பட்ட இரண்டு இந்திய மீனவர்களும், மேலதிக சட்ட நடிவடிக்காக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில், நேற்று முன்தினம் மாலை ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு – கிழக்கில் இடம்பெற்ற

## போராட்டம் விவசாயிகளதல்ல’

■ க. அகரன்



வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற போராட்டம் விவசாயிகளின் போராட்டமாக தெரியவில்லை எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன், அது கூட்டமைப்பினரின் போராட்டமாக தான் தெரிகின்றது எனவும் கூறினார்.

வவுனியாவில், நேற்று முன்தினம் (19) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், தான் செல்கின்ற அல்லது பார்க்கின்ற இடங்களில் விவசாயிகள் இந்த போராட்டங்களில் கலந்து கொண்டதாக தெரியவில்லை எனவும் அவர்களது வட்டார உறுப்பினர்கள், மாவட்ட உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தான் அந்த போராட்டங்களில் பங்கேற்றிருந்தனர் எனவும் கூறினார்.

சேதன பசளை தொடர்பாக சில முரண்பட்ட கருத்துகள் இருந்தாலும், அரசாங்கம் அந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு முழு மூச்சாக நடவடிக்கை எடுத்துள்ளது எனத் தெரிவித்த அவர், விரைவில் விவசாயிகளுக்கு சாதகமான பதில் வந்தடையும் எனவும் கூறினார்.

‘அத்துடன், கடந்த காலங்களிலும் மீனவர்களுக்கிடையே பிரச்சினை நீடித்து கொண்டுதான் இருந்தது. ஆனால் எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பதவியேற்றதில் இருந்து இந்த பிரச்சினை கடந்த காலங்களோடு ஒப்பிடும் போது மிக குறைவாகவே இருக்கிறது.

‘ஆனால் சுதந்திரமாக எந்தவித அழுத்தமும் இல்லாமல் செயற்படுகின்ற ஒரு அமைச்சர். இன்றும் கூட அமைச்சர் எங்களுடைய பிரதிநிதிகள் உட்பட அனைவரிடமும் மிகவும் அவசரமாக செய்திகளை வழங்கி மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

‘மக்களுக்கான பிரச்சினையை முற்றுமுழுதாக கண்காணித்து தீர்த்துக்கொண்டு வருகின்ற ஒருவரை, கூட்டமைப்பினர் போல் கையாலாகாதவர்கள்

ஓய்வுபெற்ற இராணுவ

## பொறியியலாளர் வெடிகுண்டுடன் கைது

■ தீஷான் அஹமட்



வெளிநாட்டுத் தயாரிப்புக் கைக்குண்டு ஒன்றை வைத்திருந்த நபரை, திருகோணமலை, கிண்ணியா பகுதியில் வைத்து கிண்ணியா பொலிஸார் நேற்று முன்தினம் (19) இரவு கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர், கிண்ணியா, புவரசாந்தீவு, ஆர்.டி.எஸ் தெருவில் வசிக்கும் 29 வயதுடையவர் என்றும் இவர், இலங்கை இராணுவத்தின் ஓய்வுபெற்ற இராணுவ பொறியியலாளர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கண்டெடுத்த தங்கச் சங்கிலி

## பொலிஸில் ஒப்படைப்பு

### சிறுவன் முன்மாதிரி

■ வரீன்ஸ்ராஜா சபேஸ்



மட்டக்களப்பு களுவன்கேணி கடற்கரையில் சிறுவன் ஒருவன் தனது நண்பர்களுடன் நீராடிக்கொண்டிருந்தவேளை கண்டெடுத்த சுமார் இரண்டரை இலட்சம் ரூபாa; பெறுமதியான தங்கச் சங்கிலியை, ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்து, சமூகத்துக்கான முன்மாதிரியைக் காண்பித்துள்ளார்.

மட்டு., மாவடிவேம்பு பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய இராசதுரை தனுகரன் என்ற இச் சிறுவன் கண்டெடுத்த தங்க ச்சங்கிலியை, உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறு கோரி, ஏறாவூர்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கீர்த்தி ஜயந்தவிடம் நேற்று (20) காலை கையளித்தார்.

இதன்போது பிரதேச கிராம சேவை அதிகாரி வீ. உதயகுமார் மற்றும் சிறுவனின் சின்னம்மா ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர்.

குடும்பத்தின் கடைசியான மூன்றாம் பிள்ளையான இவர் குடும்ப வறுமை நிலைகாரணமாக பாடசாலைக் கல்வியைக் கைவிட்டுள்ளதுடன், இவரின் தாயார் மத்திய கிழக்கு நாடு ஒன்றில் வீட்டுப் பணிப் பெண்ணாகப் பணியாற்றி வருகின்றார்.

இந்தச் சங்கிலியை, ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கொரோனா தொற்று

## கிழக்கில் குறைகிறது

■ ஒலுமுதீன் கியாஸ்



கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றுத் தாக்கங்களினதும் மரணங்களினதும் எண்ணிக்கை வெகுவாக குறைவடைந்துள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் கொரோனா நிலவரம் தொடர்பாக நேற்று (20) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 2021 ஒகஸ்ட் 3ஆம் மற்றும் 4ஆம் வாரங்களில் சராசரியாக 6,000 தொற்றாளர்களும் 100 மரணங்களும் கிழக்கு மாகாணத்தில் பதிவாகின.

“எனினும், செப்டம்பர் முதலாம் வாரத்தில் 4,400 தொற்றாளர்களும் இரண்டாம் வாரத்தில் 3,300 தொற்றாளர்களும் 80 மரணங்களும், மூன்றாம் வாரத்தில் 2,000 தொற்றாளர்களும் 67 மரணங்களும் நான்காம் வாரத்தில் 1,104 தொற்றாளர்களும் 42 மரணங்களும் ஐந்தாம் வாரத்தில் 801 தொற்றாளர்களும் 12 மரணங்களும் பதிவாகியுள்ளன.

“இவ்வறிக்கையின்படி, கிழக்கு மாகாணத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கைக்கும் மரணங்களும் படிப்படியாக குறைந்துகொண்டு



## ஓட்டோவை தீயிட்டு, எச்சரிக்கை ஒட்டினர்

■ எம்.எம்.அஹமட் அனாம், எச்.எம்.எம். பர்ஸான், கனகராசா சரவணன்)



வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் மீராவோடை பிரதேசத்தில் இனந்தெரியாதோரால் நேற்று (20) அதிகாலை 03 மணியளவில் ஓட்டோ ஒன்று தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.சந்திரகுமார தெரிவித்தார்.

அத்துடன், எச்சரிக்கை செய்து துண்டுப் பிரசுரங்களும் வீட்டின் சுவரில் ஒட்டப்பட்டுள்ளன.

மீராவோடை எம்.பி.சி.எஸ். வீதியை சேர்ந்த முகம்மது லத்திப் முகம்மது நிப்ராஸ் (வயது  28) என்பவருக்குச் சொந்தமான ஓட்டோவே தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை தூங்கிக்கொண்டிருந்த போது, வெடிப்புச் சத்தத்துடன், ஜன்னல் வழியாக வெளிச்சம் தெரிவதை அவதானித்த ஓட்டோ உரிமையாளர் உட்பட குடும்ப உறுப்பினர்கள் வெளியே வந்து பார்த்துள்ளனர்.

இதன்போது, ஓட்டோ தீயிட்டுக் கொழுத்தப்பட்டிருப்பதை அவதானித்து, அயலவர்களின்

பாடசாலைகளைத் திறப்பது

# மாணவர்களின் வெற்றிக்கே!

## ஊவா மாகாண ஆளுநர் தெரிவிப்பு

பாலித ஆரியவன்ஸ

பாடசாலைகளைத் திறப்பது, யாரின் தோல்வியோ வெற்றியோ அல்ல; மாணவர்களே வெற்றிபெற வேண்டும் என ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, ஊவா மாகாணத்திலுள்ள 200 மாணவர்களுக்குக் குறைந்த அனைத்து பாடசாலைகளும் இன்று (21) திறக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு திறக்கப்படவுள்ள பாடசாலைகளின் முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பில் நேற்று முன்தினம்(19) கண்காணிக்கச் சென்ற போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இன்று சகல பாடசாலை ஆசிரியர்களும் அதிபர்களும் கடமைகளுக்குத் திரும்ப உள்ளனர் என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இது நல்ல முடிவாக நாம் பார்க்கலாம்.

விசேடமாக நாம், இந்த நேரத்தில் மாணவர்கள் பற்றி சிந்திக்க வேண்டும். எனவே 2 வருடங்களாக பாடசாலைகளுக்கு செல்லாமையால், அவர்கள் 2 வருடங்கள் பின்னோக்கிய நிலைக்குச் சென்றுள்ளார்கள். எனவே, தொழிற்சங்க நடவடிக்கைகளை கைவிட்டு, அனைவரும் கடமைகளுக்குத் திரும்புவது வரவேற்கத்தக்கது.

பாடசாலைகளைத் திறப்பதால் யாரோ வெற்றி பெற முயற்சிப்பதாக நினைக்க வேண்டாம். எவராலும் வெற்றிபெற முடியாது. அதேபோல் எவராலும் தோற்கடிக்க முடியாது. இந்த வெற்றியை எமது பிள்ளைகளின் வெற்றியாகக் கருதுவோம் என்றார்.




பொருட்களின் விலையேற்றத்தால் நுகர்வோரின்றி

# வெறிச்சோடிய நகரங்கள்

இந்திக அருணகுமார



அத்தியாவசிய பொருட்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதால், பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக பிரதான மற்றும் உபநகரங்களுக்கு வருகை தரும் நுகர்வோரின் எண்ணிக்கை பாரியளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

இதற்கமைய, மாத்தளை, தம்புள்ள ஆகிய பிரதான நகரங்கள், பள்ளேபொல, யட்டவத்த, மடவள, நாவுல உள்ளிட்ட உப நகரங்கள் நுகர்வோரின்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

அத்துடன், தம்புள்ள, மாத்தளையில் சீமெந்து 1,250- 1,500 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

மேலும், தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலை வீழ்ச்சியடைந்திருந்தாலும் மாத்தளை உள்ளிட்ட ஏ9 வீதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் தமது விருப்பத்துக்கு ஏற்ற வகையில் மரக்கறிகளை அதிக விலைக்கு விற்கின்றமை தெரியவந்துள்ளது.

இவ்வாறான மோசடிகள் தொடர்பில் நுகர்வோர் உரிய வகையில் முறைப்பாடு செய்தால், வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக நுகர்வோர் அதிகார சபையின் மாவட்ட அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தாய்க்குப் பயந்து குளத்துக்குள் பாய்ந்த சிறுவன் பலி

சமணசிறி குணதிலக

பிபிலை, மெதகம பெல்லன்ஓயாவுக்கு அருகில், மீன் வளர்ப்புக்காக அமைக்கப்பட்டிருந்த குளமொன்றில் விழுந்து 7 வயது சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இவ்வாறு உயிரிழந்த சிறுவன் தனது 4, 11 வயதுகளை உடைய சகோதரர்களுடன், நேற்று முன்தினம் (19) மாலை 3.30 மணியளவில் பெல்லன்ஓயாவுக்கு நீராடச் சென்றுள்ளார். இதன்போது அதற்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த மீன் வளர்ப்புக்கான குளத்தைப் பார்த்துக்கொண்டிருந்த போது, அவர்களது 27 வயதுடைய தாய், பிள்ளைகளைக் கண்டு சத்தம் போட்டவாறு வந்துள்ளார்.

இதன்போது, தாய்க்கு பயந்து, பிள்ளைகள் மூவரும் குளத்துக்குள் பாய்ந்துள்ளதுடன், 7 வயது சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

ஏனைய சிறுவர்கள் இருவரும் காப்பாற்றப்பட்டு உள்ளார்கள். மெதகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நுவரெலியா நகரில் சுற்றுலாப் பயணிகள்

# சுற்றித் திரிய கட்டுப்பாடு



ஆ.ரமேஸ்

வெளி மாவட்டங்களிலிருந்து நுவரெலியாவுக்கு சுற்றுலா வருபவர்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் நேற்று (20) காலை முதல் ஆரம்பிக்கப்பட்டு உள்ளதுடன், சுற்றுலாப் பயணிகள் நகரில் சுற்றி திரிய சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபடவின் விசேட நடவடிக்கையின் கீழ், நுவரெலியா பொலிஸார், சுகாதாரப் பிரிவினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்தை அரசாங்கம் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள போதிலும், நுவரெலியாவுக்கு அதிகப்படியான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் வருகைத் தந்துள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளை எதிர்பார்த்து, குதிரை சவாரி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், தமது வருமானத்துக்காக காத்திருப்பதையும் அவதானிக்க கூடியதாக உள்ளதுடன், நகரின் பிரதான இடமான விக்டோரியா பூங்கா நேற்று (20) பூட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சந்திப்பு


நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான வேலுசாமி இராதாகிருஷ்ணனை, இராகலை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் நிர்வாக சபையினர் சந்தித்து உரையாடினார்கள். கோவில் பணிகள் தொடர்பாக இக்கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

(பா. பாலேந்திரன் )

குஷி நகருக்கு சென்றவர்களை

# வாழ்த்தும் ரமேஸ்வரன் எம்.பி

பீ.கேதீஸ்



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பரஸ்பர ஒற்றுமையை வலுப்படுத்தும் வகையில், நேற்றைய (20) புனித 'வப்' போயா தினத்தில், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து, இந்தியா குஷி நகருக்கு 100 பௌத்த பிக்குகளுடன் பயணம் மேற்கொண்டுள்ள விளையாட்டு துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பிரதமரின் பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான் ஆகியோருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதாக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.

> விமான நிலைய திறப்பு விழாவுக்கு இலங்கையிலிருந்து விருந்தினர்கள் அழைக்கப்பட்டிருப்பது வரப்பிரசாதமாக அமைகின்றது

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன் மூலம், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நேரடியான பரஸ்பர உறவு வலுவடைவதோடு, இலங்கையில் இருந்து 'புத்தகாயா' வுக்கு தரிசனம் மேற்கொள்ளும் இலங்கையர்களும் நேரடியாகச் சென்று வரக்கூடிய வசதிகள் அமைத்துக் கொடுக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த விமான நிலைய திறப்பு விழாவுக்கு இலங்கையிலிருந்து விருந்தினர்கள் அழைக்கப்பட்டிருப்பது வரப்பிரசாதமாக அமைகின்றது என்றார்.

# வெள்ளத்தில் மூழ்கியது அக்குறணை

மொஹமட் ஆஸிக்




கண்டி மாவட்டத்தில் நேற்று முன்தினம் (19) மாலை தொடக்கம் பெய்த கடும் மழை காரணமாக, கண்டி-யாழ்ப்பாணம் ஏ9 வீதியில் அமைந்துள்ள அக்குறணை நகரம் வெள்ள நீரில் மூழ்கியது.

இப்பிரதேசத்தில் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் பெய்த வந்த கடும் மழை காரணமாக, நகரினூடாக ஓடும் ஆறு பெருக்கெடுத்ததில் அக்குறணை நகரம் நீரில் மூழ்கியதுடன், சுமார் நான்கு அடி வரையில், நீர் மட்டம் நகரின் சில பகுதிகளில் காணப்பட்டது.

அக்குறணை நகரம் நீரில் மூழ்கியதை அடுத்து, பல வர்த்தக நிலையங்களுக்குள்ளும் நீர் புகுந்தது.

பசறை கல்வி வலய மாணவர்களுக்கு

# இன்று தடுப்பூசி

எம். செல்வராஜா

பசறை கல்வி வலயத்தின் 18 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் 'பைசர்' தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம், பசறை உடகம மகா வித்தியாலயம் ஏனைய விகாரைகள், பொது இடங்களில் இன்று (21) மேற்கொள்ளப்பட உள்ளது என, பசறை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். ஜெயக்குமார் தெரிவித்தார்.

அத்துடன், இன்று பதுளை, ஹப்புத்தளை, பண்டாரவளை ஆகிய பகுதிகளின் பாடசாலைகள் பலவற்றிலும் மாணவர்களுக்கு 'பைசர்' தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை அவ்வப்பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர்கள் துரிதமான மேற்கொண்டு வருகின்றனர். அந்தந்த வலயக் கல்விப் பணிப்பகங்களும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு பூரண ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றனர் என்றார்.

# ஹட்டனில் முட்டை ரொட்டியின் விலை எகிறியது

சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன் நகரில் முட்டையின் விலை அதிகரிப்பையடுத்து, முட்டை ரொட்டியின் விலையும் 60-65 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஹட்டன் நகரில் வெள்ளை முட்டையொன்று 22 ரூபாய்க்கு விற்கப்படுவதுடன் சிவப்பு முட்டை 23 ரூபாய்க்கும் விற்கப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

# பதுளை மாவட்டத்தில் இதுவரை 427 பேர் மரணம்

எம். செல்வராஜா

பதுளை மாவட்டத்தில் இதுவரை கொரோனாவால் 427 பேர் மரணமடைந்துள்ளனர் என, பதுளை மாவட்ட சுகாதார சேவைகள் பணியக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பதுளை மாவட்டத்தின் 15 பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே, இந்த மரணங்கள் பதிவாகியுள்ளன. இதற்கமைய, பதுளை 58 பேர், பண்டாரவளை 49 பேர், எல்ல 12 பேர், ஹல்துமுல்ல 21 பேர், ஹாலி-எலை 48 பேர், ஹப்புத்தளை 33 பேர், கந்தகெட்டிய 04 பேர், லுணுகலை 13 பேர், மகியங்கனை 52 பேர், மீகாகியுல 11 பேர், பசறை 29 பேர், ரிதிமாலியத்தை 12 பேர், சொரணாதொட்டை 06 பேர், ஊவா - பரணகமை 25 பேர், வெலிமடை 54 பேர் என்ற வகையில் பதுளை மாவட்டத்தின் 15 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 427 பேர் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

LK Newspapers

# புதிய அத்தியாயத்துக்குள் காலடி எடுத்துவைக்கும் மற்றுமொரு நாள்

கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக, வீடுகளுக்குள்ளே முடங்கி கிடந்த மாணவர்களில் சிலர், இன்று (21) முதல் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். முதலாம் வகுப்புக்கு முதல் நாளன்று செல்லும் போது, எவ்வாறான மனநிலை இருந்திருக்குமோ அதனையும் விஞ்சுமளவுக்கு, மாணவர்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்பது மட்டுமே யாதார்த்தமாகும்.

கடுமையான பிரயத்தனங்களுக்குப் பின்னர், பாடசாலைகள் திறக்கப்படுகின்றன. முன்னேற்பாடாக, சில பாடசாலைகளில் வகுப்பறைகளை சுத்தப்படுத்தல், பாடசாலை வளாகத்தை சுத்தம் செய்தல் உள்ளிட்ட சிரமதான பணிகள், கடந்த இரண்டு நாள்களாக முன்னெடுக்கப்பட்டன.

கொரோனா தொற்றின் அச்சம், கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வந்தாலும், எவ்விதமான தடுப்பூசியையும் செலுத்திக்கொள்ளாத மாணவப் பிரிவினரே, இன்று (21) பாடசாலைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். ஆகையால், ஒவ்வோர் அடியையும் மிகவும் கவனமாக வைக்கவேண்டும். இல்லையேல், 'பாடசாலைக் கொத்தனி' உருவாகுவதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும்.

இதற்கிடையே, மேல் மாகாணத்தைத் தவிர, ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைக்கு, முதல் தடவையாகவும் இரண்டாவது தடவையாகவும் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட தங்களுடைய பிரச்சினைகளுக்கு, உரியவகையில் தீர்வைப் பெற்றுத்தர வேண்டுமெனக் கோரி, சுமார் 95 நாள்களாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தையும் அதிபர், ஆசிரியர் சங்கங்கள், தமது போராட்ட வழிமுறைகளில் மாற்றங்களைச் செய்துள்ளன; இன்னும், சில சங்கங்களைச் சேர்ந்தவர்கள், போராட்டம் தொடருமென அச்சுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையே, இன்றும் நாளையும் (21,22) பாடசாலைக்கு சமூகமளிக்கமாட்டோம் என்றும், எதிர்வரும் 25ஆம் திகதியன்றே, பாடசாலைக்கு வருவோமென, அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. எப்படியோ, பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே சகலரினதும் அவாவாகும்.

வீடுகளுக்குள்ளே முடங்கி இருந்தமையால், சில மாணவர்களுக்கு சீருடை போதாமல் இருக்கும். உடனடியாக மாற்றுச் சீருடையை தைத்துக்கொள்ள முடியாதவர்களுக்கு உதவும் வகையில், இவ்விரண்டு நாள்களும் வர்ண உடைகளை உடுத்திக்கொண்டு வரலாமென சில பாடசாலை நிர்வாகம் அறிவித்தல் விடுத்துள்ளது.

என்னதான், இன்றையதினம் மீளவும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் கல்விச் செயற்பாட்டில் உடனடியாக இறங்கமுடியாது. மாணவர்களைத் தயார்படுத்தல் வேண்டும். பல வருடங்களின் பின்னர், தங்களுடைய நண்பர்களைச் சந்தித்துக்கொள்கின்றனர். அவர்கள், முடக்கத்தின் போது தமக்குக் கிடைத்த பல்வேறான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வர்.

சிறிய வகுப்புகளைச் சேர்ந்தவர்களுக்கு அது, சரியானதாகத் தென்படலாம். ஆனால், பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்கள், கற்றுக்கொள்வதில் கூடுதலான ஆர்வத்தைக் காட்டவேண்டும். அதனூடாகவே அடுத்தடுத்த படிகளில் கால்களை வைத்து முன்னேற முடியும். இன்றைய மீளாரம்பம், தடைகள் இன்றித் தொடர வேண்டும் என்பதே, எமது பிரார்த்தனையாகும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

வையகமும் மனிதனும் ஒன்றோடு ஒன்றாகப் பிணைந்தவர்கள். இதை உறுதியுடன், தீட்சண்யமாக நம்புங்கள். எனவே, என்றும் உலகை விரும்புங்கள்.

உலக ஈர்ப்பு உங்களை நாடி வரும். மனம் மகாவல்லமையும் வசீகரமும் பெறும். உலகம் மட்டுமல்ல, பிரபஞ்சமும் உங்களுக்கானது.

உலகை வெறுக்க வேண்டிய அவசியமே கிடையாது. எவரையும் குறை சொல்வதும் துன்பத்தின்போது, 'பூமியில் ஏன் பிறந்தேன்' எனச் சலிப்பதும் வாழ்வு சிறப்பானால் தன்னையும் பிறந்த மண்ணையும் மறப்பது போன்ற குணங்கள் தவறானவை.

இன்று, பல உலகத் தலைவர்கள், போரை விரும்புகின்றார்கள்; வலிந்து சண்டைக்குப் போகிறார்கள். வெளிநாடுகளுடன் போரிட முடியாதவர்கள், தங்கள் நாட்டுக்குள் வீரம் பேசி, மக்களை ஏமாற்றுகின்றார்கள். கடவுளை நம்புங்கள்; அகிலத்தைப் போற்றுங்கள்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இழுவை வலைத் தடைச் சட்டத்தின் அவசியம்

புருஜோத்தமன் தங்கமயில்



திங்கட்கிழமை (18) இரவு, எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்தியப் படகொன்றின் மீது, இலங்கை கடற்படையின் கண்காணிப்புப் படகு மோதியதில், மீனவர் ஒருவர் உயிரிழந்திருக்கிறார்.

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த ராஜ்கீரன் என்கிற மீனவரே இவ்வாறு உயிரிழந்திருக்கிறார். அவருக்குத் திருமணமாகி, 40 நாள்கள் மட்டுமே ஆகியிருக்கின்றன.

இலங்கை - இந்தியக் கடற்பரப்பில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான மீனவர்களில் ஒருவராக, ராஜ்கீரனும் மாறியிருக்கின்றார்.

> **தமிழகத்தின் தமிழர்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான உறவு சீராக இருப்பது, தென் இலங்கைக்கு அச்சுறுத்தலானது என்று அவர்கள் நினைக்கிறார்கள். அந்த நினைப்பின் போக்கில், இலங்கை ஆட்சியாளர்கள், சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இருந்து விலகியிருக்க முயற்சிக்கலாம்**

இலங்கை, இந்திய மீனவர்களுக்கு இடையிலான பிணக்கு என்பது, அரை நூற்றாண்டு காலத்துக்கும் மேலானது. அதுவும், இந்தியப் பெருமுதலாளிகள், பாரிய இழுவை மடிகளைக் கொண்ட தொழில்முறைக்குச் சென்றது முதல், இலங்கை, இந்திய மீனவர் பிணக்கு, அடுத்த கட்டத்தை அடைந்தது.

அந்தப் பிணக்கில், தொடர்ச்சியாகப் பாதிக்கப்படும் தரப்பாக, இலங்கை மீனவர்களே இருந்தனர். இலங்கையின் கடற்பரப்பின் வளத்தை, ஒரேயடியாக வாரிச்சுருட்டிச் செல்லும் இந்திய பாரிய இழுவைப் படகுகள், இலங்கை மீனவர்களின் வலைகள் உள்ளிட்ட தொழில் உபகரணங்களையும் சேதமாக்கிவிட்டும் செல்கின்றன.

அதுவும், வடக்கு மீனவர்கள் பார்த்திருக்க, அவர்களின் கரைகளில் அதுவும் நிலத்திலிருந்து 500 மீட்டர் தூரமுள்ள கடற்பரப்பு வரையில் வந்து, பாரிய இழுவைப் படகுகள் கொண்டு, கடல் வளத்தை அள்ளிச் செல்கின்றன.

கடந்த வாரங்களில், பருத்தித்துறை, வடமராட்சிக் கிழக்கு, முல்லைத்தீவு ஆகிய இடங்களின் கடற்பரப்பில், ஆயிரக்கணக்கான இந்திய இழுவைப் படகுகள், நாள்கணக்கில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தன.

கடந்த சில ஆண்டுகளாக, சற்றே குறைந்திருந்த இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல், சில மாதங்களாக மீண்டும் அதிகரித்திருக்கின்றன. இதற்கு, தற்போதைய ராஜபக்‌ஷ அரசாங்கத்தின் மேம்போக்கான அணுகுமுறை காரணமாகும்.

குறிப்பாக, கடற்றொழில் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா, இந்திய இழுவைப் படகு மீனவர்களை, இலங்கையின் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிப்பது தொடர்பில், ஆர்வம் வெளியிட்டிருந்தமை அதற்கு முக்கிய காரணமாகும்.

இலங்கையின் வடக்கு மீனவர்கள், தங்களது கடற்பரப்பினுள், கடல் வளத்தை அழிக்கும் இழுவை மடி தொழில் முறையைத் தடை செய்ய வேண்டும் என்று, 2010ஆம் ஆண்டு முதல் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள்.

அதன் பலனாக, கடந்த நல்லாட்சிக் காலத்தில் எம்.ஏ. சுமந்திரன் முன்வைத்த இழுவை வலைத் தடைச் சட்டமூலம், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இலங்கையின் கடற்பரப்பில், எந்தவொரு தரப்பினரும் இழுவை வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதைத் தடை செய்யும் குறித்த சட்டத்தில், தடையை மீறி மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு எதிரான தண்டனைகளும் முக்கியமானவை.

படகுகளைப் பறிமுதல் செய்வது தொடங்கி, பாரிய தண்டத்தொகையையும் அறவிடும் சரத்துகளும் உள்ளடங்கி இருக்கின்றன. குறித்த சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னராக, இலங்கை, இந்திய மீனவர் தரப்புகளுக்கு இடையில், கொழும்பிலும் புதுடெல்லியிலும் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றிருக்கின்றன.

இதன்போது, இழுவை வலைகளால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் ஆராயப்பட்டு, அதைத் தடை செய்வது சரியான நடைமுறை என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. படிப்படியாக, இழுவை வலை தொழில்முறையில் இருந்து, இந்திய மீனவர்களை மாற்றுத் தொழில்முறைக்கு மாற்றுவது தொடர்பிலும், இந்திய மத்திய அரசு இணக்கத்தை வெளியிட்டிருந்தது.

ஆனாலும், அந்த நடவடிக்கைகளில் இந்திய மத்திய அரசோ, தமிழக அரசோ ஈடுபடவில்லை. இதனால், இந்திய இழுவைப் படகுகள் எல்லை தாண்டி, இலங்கையின் குறிப்பாக வடக்கின் கடல்வளத்தை அபகரிக்கும் செயற்பாடுகளும் நின்றுபோகவில்லை.

தற்போது, இந்திய இழுவைப் படகுகள், இலங்கையின் கடற்பரப்பில் நுழைவதைத் தடுப்பதற்கான ஒரே வழி, நிறைவேற்றப்பட்ட இழுவை வலைத் தடைச் சட்டத்தை, முறையாக அமல்படுத்துவதிலேயே தங்கியிருக்கின்றது.

இதை வலியுறுத்தி, எம்.ஏ சுமந்திரனின் அழைப்பின் பேரில், ஞாயிற்றுக்கிழமை (17) முல்லைத்தீவில் இருந்து பருத்தித்துறை வரையிலான கடல்வழிப் போராட்டமொன்றை மீனவர்கள் நடத்தியிருந்தனர்.

சம்பந்தப்பட்ட போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, சமூக ஊடகங்களில் சில 'ஆர்வக்கோளாறுகள்', குறித்த போராட்டம், இந்தியாவுக்கு எதிராக ஏன் முன்னெடுக்கப்படவில்லை என்று கேள்வி எழுப்பின. இன்னும் சிலரோ, போராட்டக்காரர்களைக் கேலி செய்தனர்.

போராட்டமொன்று முன்னெடுக்கப்படும் போது, அதன் அடிப்படைகள் தெரியாது விமர்சிக்கவும் கேள்வி எழுப்பவும் முற்படும்போது, போராட்டம் குறித்துப் பொதுவெளியில் தப்பான எண்ணங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. அவை, அரைநூற்றாண்டு காலமாக வளச்சுரண்டலால் பாதிக்கப்படும் வடக்கு மீனவர்களை மோசமாகப் பாதிக்கும்.

இன்னொரு தரப்போ, குறித்த போராட்டம், இந்தியாவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டதாகச் சித்திரிக்க முயன்றன. அதிலும், மறவன்புலவு சச்சிதானந்தன் போன்ற வெளிநாடுகளின் மதவாத அமைப்புகள், புலனாய்வு அமைப்புகளின் முகவர்கள், துண்டறிக்கைகளின் மூலம் பிரிவினையை தோற்றுவிக்க முயன்றன.

போராட்டம் குறித்த தெளிவின்றி விமர்சிப்பவர்களும் எள்ளிநகையாடல் செய்பவர்களும், மறவன்புலவு சச்சிதானந்தனுக்கு ஒப்பானவர்களேயாவர்.

இலங்கையில் நிறைவேற்றப்பட்ட சட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம், கடல் வளச்சுரண்டலைத் தடுத்து, வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற முடியும் என்றால், அதைச் செய்வதுதான் முதல் வேலையாக இருக்க வேண்டும்.

துறைசார்ந்த அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா, சட்டத்தை அமல்படுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குப் பணிப்பது, அவரது முக்கிய வேலை. ஆனால், அவரோ அதையெல்லாம் விடுத்து நின்று, இந்திய இழுவைப் படகு மீனவர்களை, இலங்கையின் கடற்பரப்பில் அனுமதிப்பது தொடர்பில், ஆர்வம் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார். அவர், யாருக்கான அமைச்சர் என்பதையே மறந்து நின்று செயற்படும் தோரணையை வெளிப்படுத்துகிறார்.

இழுவை வலைத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதைத் தவிர்ப்பதன் ஊடாக, இலங்கை, இந்திய மீனவர்களுக்கு இடையில் பிணக்குகளைப் பேண வேண்டிய தேவை, தென் இலங்கையின் இனவாத, அடிப்படைவாத தரப்புகளுக்கு இருக்கலாம்.

ஏனெனில், தமிழகத்தின் தமிழர்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான உறவு சீராக இருப்பது, தென் இலங்கைக்கு அச்சுறுத்தலானது என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

அவ்வாறான நினைப்பின் போக்கில், ராஜபக்‌ஷர்களோ அல்லது நாளை வரும் இன்னோர் ஆட்சியாளர்களோ, சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இருந்து விலகியிருக்க முயற்சிக்கலாம்.

ஆனால், அவ்வாறான சதிகளுக்கு எதிராக ஒருங்கிணைவது என்பது, தமிழ் மக்களைப் பொறுத்தளவில் முக்கியமானது. அதுதான், தேவையற்ற உயிரிழப்புகளையும் தடுக்கும்.

இலங்கை, இந்திய கடற்பரப்பில் யார் கொல்லப்பட்டாலும், அவர்கள் ஈழத்தமிழர்களாகவோ அல்லது தமிழகத் தமிழர்களாகவோ தான் இருப்பார்கள்.

இழுவை வலைத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், இலங்கை, இந்திய மீனவர்களுக்கு இடையிலான பிணக்குகளையும் உயிரிழப்புகளையும் குறைத்துக் கொள்ளலாம். ஆக, அந்தக் கட்டத்தை அடைவதுதான் தற்போதுள்ள முக்கியமான வழிமுறை.

## கழிதங்கள்

### வன்முறைகளை கட்டுப்படுத்தத் தவறும் பொலிஸ்

கிளிநொச்சி, அக்கராயன் பிரதேசம் வன்முறையின் கோட்டையாக மாறுவதற்கு, அக்கராயன் பிரதேச பொலிஸாரும் உடந்தையென, பிரதேச மக்கள் விசனப்படுகின்றனர்.

அக்கராயன் பிரதேசத்தில், கடந்த சில மாதங்களாக வன்முறைகள் தலைவிரித்தாடுகின்றன. கசிப்பு உற்பத்திகளும் போதைப்பொருள் பாவனைகளும் அதியுச்சத்தில் இருப்பதுடன், பாடசாலை மாணவர்களும் போதைப்பொருள் பாவனைகளுக்கு தூண்டப்படுகின்றார்கள்.

குறித்த பிரதேசங்களில், இரவு நேரங்களில் வீதியில் நடமாட முடியாத சூழ்நிலை உருவாகி இருப்பதாகவும் மாலை நேரங்களில் வீதியில் செல்லும் பெண்களை, ஆபாச வார்த்தைகளால் அசௌகரியப்படுத்துவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான குற்றச் சம்பவங்கள் தொடர்பில், பொலிஸாருக்கு அழைப்பெடுத்துக் கூறிய போதும், குற்ற செயல்களுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களைக் கேட்டவுடன், அவர்கள் பாராமுகத்துடன் நடந்துகொள்கின்றார்கள்.

அக்கராயன், மணியங்குளம் பொருண்மிய குடியிருப்பு, விநாயகர் குடியிருப்பு போன்ற பகுதிகளில், குறித்த குற்றச் செயல்கள் இடம்பெறுவதுடன் மாணவர்களும் வாள்வெட்டில் ஈடுபடுகின்றமை தெரியவந்துள்ளது.

அக்கராயன் பொலிஸார் மீது பிரதேச மக்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில், பிராந்திய பொலிஸாரிடம் வினவிய போது, "போதிய பொலிஸார் இல்லை" என்று தெரிவித்தனர்.

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர்களின் பெயரை பதிவு செய்து, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தால், குறித்த நபர்களைக் கைது செய்ய, இன்னும் மூன்று முறைப்பாடுகள் வேண்டும் என்று பொலிஸ் நிலையத்தில் சொல்கின்றார்கள் என, கிராமவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கெ. கீதாஞ்சன்

உத்தர பிரதேசம்

குஷிநகர் விமான நிலையத்தை


# புத்தருக்காக அர்ப்பணிக்கிறோம்

பௌத்த கொள்கையின் மையமாகத் திகழும் இந்தியாவில், இந்த விமான நிலையத்தை புத்தருக்காக அர்ப்பணிக்கிறோம். குஷிநகர் விமான நிலையத்தை மேம்படுத்துவதற்கு, முக்கியத்துவம் அளித்தோம் என, குஷிநகர் விமான நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போது பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.



உத்தரப் பிரதேச மாநிலம் குஷிநகர் சர்வதேச விமான நிலையம் ரூ.260 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. புத்தர் முக்தி அடைந்த இடத்தைப் பார்வையிட வரும் உள்நாட்டு, சர்வதேச யாத்திரிகர்களுக்கு வசதியாக இந்த விமான நிலையம் அமையும். உலகம் எங்கும் உள்ள புத்தரின் யாத்திரை தலங்களை இணைக்கும் வகையிலும் இது செயற்படும்.

பல ஆண்டுகளின் நம்பிக்கை, எதிர்பார்ப்புகளுக்கு விடையாக குஷிநகர் விமான நிலையம் அமைந்துள்ளது. எனது மகிழ்ச்சி இரு மடங்கு அதிகரித்துள்ளது. ஆன்மிக பயணத்தில் ஆர்வமாக இருக்கும் எனக்கு, இன்றைய நாள் திருப்தி அளிக்கிறது என்றார்.




## பழிவாங்கும் நோக்கில் சாருக்கானின் மகன் மீது வழக்கு

### சிவசேனா அமைச்சர் நீதிமன்றத்தில் வழக்கு

போதைப் பொருள் தடுப்பு பிரிவு உயரதிகாரி, தனிப்பட்ட முறையில் பழிவாங்கும் வகையில் பொலிவுட் நடிகர் ஷாருக்கானின் மகன் ஆர்யான் மீது வழக்குத் தொடர்ந்துள்ளார் என, மஹாராஷ்டிரா மாநில சிவசேனா அமைச்சர், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மஹாராஷ்டிராவில் முதலமைச்சர் உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் கூட்டணி அரசாங்கம் அமைந்துள்ளது. தலைநகர் மும்பைக்கு அருகே சொகுசு கப்பலில் போதைப் பொருள் 'பார்ட்டி' நடந்ததாக, போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் சோதனை நடத்தினர்.

அதில், பொலிவுட் நடிகர் ஷாருக் கான் மகன் ஆர்யான் உட்பட பலர் கைது செய்யப்பட்டனர். ஆர்யான் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துக்கு உத்தவ் தாக்கரே உட்பட சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் தலைவர்கள் தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், சிவசேனா மூத்த தலைவரும், மஹாராஷ்டிரா மாநில அமைச்சருமான கிஷோர் திவாரி, உச்ச நீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்துள்ளார்.




## பயங்கரவாதிகளின் கூடாரமே வங்கம்

பயங்கரவாதிகளின் கூடாரமாகி விட்டது வங்கதேசம்; அங்கு இந்துக்களுக்கு எதிரான போக்கு அதிகரித்துள்ளமை கவலையளிக்கிறது என, பிரபல எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரின் கூறியுள்ளார்.

வங்கதேசத்தைச் சேர்ந்த பிரபல பெண் எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரின், முஸ்லிம் மதத்தை பற்றி விமர்சித்து எழுதியதால் வங்கதேசத்துக்குள் நுழைய அந்நாட்டு அரசாங்கம் தடை விதித்துள்ளது. இதனால் பிரித்தானியா, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் வசித்து வருகிறார். அவருக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வங்கதேசத்தில் இந்துக்களுக்கு எதிராக நடந்து வரும் வன்முறை பற்றி, தஸ்லிமா நஸ்ரின் கூறியதாவது: பயங்கரவாதிகளின் கூடாரமாக வங்கதேசம் மாறி விட்டது. அங்கு மதரசாக்கள், பயங்கரவாதத்தை பரப்பும் மையமாகச் செயற்பட்டு வருகின்றன. அரசியல் இலாபத்துக்காக, பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அரசாங்கம், மதத்தை பயன்படுத்தி வருகிறது என குற்றம் சாடினார்.

மதுரை

## பா.ஜ.க ஒரு போதும் பயப்படாது

பயங்கரவாத சக்திகளுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் பயப்படலாம்; ஆனால்,பாரதிய ஜனதா கட்சி ஒரு போதும் பயப்படாது என பாரதிய ஜனதா கட்சியின் சிறுபான்மையினர் பிரிவு தேசிய செயலர் இப்ராஹிம் கூறினார்.



மிலாத்துன் நபியை முன்னிட்டு, மதுரையில் கோரிப்பாளையம் தர்காவுக்குச் செல்ல முயன்று, கைதான இப்ராஹிம் கூறியதாவது: தொடர்ந்து மத நம்பிக்கையை சீர்குலைக்கும் திராவிட முன்னேற்ற கழக அரசாங்கம், முஸ்லிம்களை பா.ஜ.கவுக்கு எதிரான வன்முறைக்கு தூண்டிவிட திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது.

பா.ஜ.கவில் முஸ்லிம்கள் இணையும் நிலையில் பள்ளிவாசலுக்கும், தர்காவுக்கும் அனுமதிக்க மாட்டோம் என எஸ்.டி.பி.ஐ. - பி.எப்.ஐ. - த.மு.மு.க போன்ற இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகள், பொலிஸாருக்கு வெளிப்படையாக மிரட்டல் விடுகின்றன. மிலாத்துன் நபியை முன்னிட்டு, கோரிப்பாளையம் தர்காவுக்கு முஸ்லிம்களுடன் செல்ல முயன்ற எங்களை, சட்டம் - ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் எனக் கூறி கைது செய்தனர்.

இது, ஜனநாயகத்துக்க எதிரானது.இதுபோன்ற கைதுக்கு பயப்பட மாட்டோம். பயங்கரவாத சக்திகளுக்கு தி.மு.க, அரசாங்கம் பயப்படலாம்; பா.ஜ.க ஒரு போதும் பயப்படாது. பா.ஜ.கவில் உள்ள முஸ்லிம்களுக்கு வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டால், அதை போராடி மீட்போம். இவ்வாறு இப்ராஹிம் கூறினார்.

சென்னை

## ஊரக உள்ளாட்சி தேர்தலில் முறைகேடு

ஒன்பது மாவட்ட ஊரக உள்ளாட்சி தேர்தல் முறையாக நடைபெறவில்லை என புகார் அளித்துள்ளோம். புகார்கள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை தெரிவித்தோம். இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி ஆளுநரை சந்தித்த பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்து கூறியுள்ளார்.



இச்சந்திப்பில் அவர் தொடர்ந்து கூறியதாவது:

ஊரக உள்ளாட்சித் தேர்தலில், விதிமுறைகளை மீறி அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தினரின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, அ.தி.மு.க வேட்பாளர்களது வெற்றியை தாமதமாக அறிவித்தனர். ஆனால், திராவிட முன்னேற்ற கழக வெற்றியை உடனுக்குடன் அறிவித்தனர்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நேர்மையாக நடக்கும் என்பதை உறுதிபடுத்தவும் ஆளுநர் ஆர்.என்.ரவியிடம் அ.தி.மு.க தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவை மாநில தேர்தல் ஆணையம் பின்பற்றவில்லை என்றார்.

தொடர்ந்து, சசிகலா குறித்து எடப்பாடி பழனிசாமியிடம் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த அவர், அ.தி.மு.கவுக்கும் சசிகலாவுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. கொடியை பயன்படுத்துவது தொடர்பாக சட்டப்படி புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றார்.

ஹூப்பள்ளி

## போதை மருந்துக்கு அடிமையானவர் ராகுல்

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, போதை மருந்துக்கு அடிமையானவர். போதை மருந்துகளை விற்பனை செய்பவர் என்று கர்நாடக பா.ஜ.க மாநிலத் தலைவர் நலின் குமார் காட்டீல் சர்ச்சைக்குரிய வகையில் பேசியுள்ளார்.

கர்நாடக மாநிலத்தில் நடைபெற உள்ள மேல்சபைத் தேர்தலுக்குத் தயாராவது குறித்த பாரதிய ஜனதா கழகக் கூட்டம் ஹூப்பள்ளி நகரில் நடந்தது. இதில் மாநில தலைவர் நலின் குமார் காட்டீல் பேசுகையில் "மிகவும் தரம்தாழ்ந்து காங்கிரஸ் அரசியல் செய்கிறது. ராகுல் காந்தி போதை மருந்துக்கு அடிமையானவர். இதை நான் சொல்லவில்லை. பல்வேறு செய்திகளில் வந்துள்ளன. காங்கிரஸ் கட்சியை அவர்களால் நடத்தமுடியவில்லை. கட்சியை நடத்த முடியாதவர்களால் எவ்வாறு நாட்டை நிர்வகிக்க முடியும்" எனத் தெரிவித்தார்.

கர்நாடக மாநில பா.ஜ.க தலைவர் நலின் குமார் காட்டீல் பேசியதற்கு காங்கிரஸ் கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்து, அவர் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோர வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.







## புதிய வீடு கையளிப்பு

பெரியநீலாவணையில் வசதிகுறைந்த தமிழ்க் குடும்பமொன்றுக்கு புதிய வீடு ஒன்றை நிர்மாணித்த இலங்கை இராணுவம், நேற்று முன்தினம் (19) செவ்வாய்க்கிழமை கையளித்தது.

இராணுவத்தால் ,பெரியநீலாவணை 1 'பி' பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீட்டை, இலங்கை இராணுவத்தின் கிழக்கு மாகாணத்துக்கான கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் வீரசூரிய திறந்துவைத்தார்.

(படங்களும் தகவலும் வி.ரி.சகாதேவராஜா)

## அலரி மாளிகையில்...

மீலாதுன் நபி தின தேசிய நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் (19) பிற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்றது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

தேசிய மீலாதுன் நபி தின விழா 2021 ஐ முன்னிட்டு நினைவு முத்திரையும் முதல் நாள் உறையும் இதன்போது வெளியிடப்பட்டது.

வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும, குறித்த நினைவு முத்திரை, முதல் நாள் உறையை பிரதமருக்கு வழங்கினார்.

முஹம்மது நபி நாயகம் அவர்களது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இதன்போது பிரதமரால் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன.

நீதி அமைச்சர் அலி சப்ரி, இதன்போது பிரதமருக்கு நினைவு பரிசொன்றை வழங்கிவைத்தார்.












## ஊடக அமையம் திறந்து வைப்பு

முல்லைதீவு ஊடக அமையத்தின் கட்டடத் திறப்பு விழா, அந்த அமையத்தின் தலைவர் சண்முகம் தவசீலன் தலைமையில் நேற்று (20) நடைபெற்றது

அந்நிகழ்வில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கைகள் தலைவர் கலாநிதி எஸ் ரகுராம், முல்லைத்தீவு ஊடக அமையத்தின் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார். அலுவலக கட்டடத்தை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.











அமெரிக்கா

# மனித எலும்புகளை விற்பனை செய்யும் இளைஞர்

அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில் 21 வயதான ஜோன் பெர்ரி எனும் இளைஞர், மனித எலும்புகளையும் மண்டையோடுகளையும் விற்பனை செய்யும் விநோத நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்நிலையில் இது குறித்து டிக் டொக் செயலியில் காணொளியொன்றை வெளியிட்ட அவர், தனது வீட்டிலேயே மனிதனின் மண்டை ஓடு, கை, கால், குழந்தைகளின் எலும்புகள் போன்றவற்றை வரிசையாக அடுக்கி வைத்து விற்பனை செய்வது போன்று பதிவிட்டுள்ளார்.


அதிலும் ஒவ்வோர் எலும்பையும் காட்டி, அதுகுறித்த அறிவியல் பூர்வமான தகவலையும் கூருகிறார். இதனை அடுத்து அதன் விலையையும் குறிப்பிடுகிறார். இதுவரை ஐந்து இலட்சம் பேர் இவரைப் பின்தொடர்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் சிலர் சமூக வலைத்தளங்களில் இது போன்று செய்வது நியாயமா என்று கேள்வியும் எழுப்புகின்றனர்.

இதற்கு அவர் விளக்கம் அளிக்கையில், "பெரும்பாலும் மருத்துவர்கள், எலும்பியல் நிபுணர்களே அதிக அளவில் வாங்குகின்றனர். அவர்கள் தங்களது மருத்துவ ஆராய்ச்சி, மாணவர்களுக்குப் பாடம் கற்பிப்பதற்காகவே எலும்புகளை வாங்கிச் செல்கின்றனர்" என்று தெரிவித்துள்ளார்.

எனினும், அவர் எவ்வாறு எலும்புகளைப் பெற்றுக்கொள்கின்றார் என்பது குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.



அமெரிக்கா

# சிலுவைப் போர் வீரரின் வாள் கண்டுபிடிப்பு

சிலுவைப் போர்வீரருக்குச் சொந்தமானது எனக் கருதப்படும் சுமார் 900 ஆண்டுகள் பழைமை வாய்ந்த வாள் ஒன்று மத்திய தரைக்கடலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வாளானது இஸ்ரேலுக்கு அப்பால் உள்ள கடலில் கண்டெடுக்கப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது, ஹைஃபா என்ற துறைமுக நகருக்கு அருகே இருப்பதால் கடலோடிகள் அங்கு அடைக்கலம் பெற்றிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

குறித்த துறைமுக நகர், பல ஆண்டுகாலமாக வணிகக் கப்பல்கள் வந்துசென்ற இடம் என்பதால், பல விலைமதிப்பற்ற தொல்பொருட்கள் அங்கு இருக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த வாளானது சுத்தம் செய்யப்பட்டபின்னர் காட்சிக்கு வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




ஸ்பெயின்



# சிதறிய எரிமலைக் குழம்பால் பற்றி எரிந்த வீடுகள்

ஸ்பெயினின் லா பல்மா தீவில் வெடித்துச் சிதறிய எரிமலையில் இருந்து வெளிப்பட்ட தீக்குழம்பால் ஏராளமான வீடுகள் தீக்கிரையாகியுள்ளதோடு 1,833 ஏக்கர் நிலமும், சுமார் 2,000 கட்டடங்களும் பாதிக்கப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

83,000 பேர் வசிக்கும் இத் தீவில் இதுவரை 7,000 பேர் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சீனா



# பிள்ளைகள் தவறிழைத்தால் பெற்றோருக்கு தண்டனை

பிள்ளைகள் தவறுசெய்தால் பெற்றோர்களுக்குத் தண்டனை வழங்கும் புதிய சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர சீன பாராளுமன்றம் பரிசீலித்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சீனாவில் அண்மையில், குடும்ப கல்வி ஊக்குவிப்புச் சட்டம் என்ற வரைவு தயார் செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம், குழந்தைகள் வளர்ப்புப் பற்றிய அறிவூட்டல்களும் குழந்தைகளுடைய தவறான செயல்களுக்குப் பெற்றோரைப் பொறுப்பாக்குதல் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இச்சட்டத்தில் குழந்தைகளுடன் பெற்றோர் நேரத்தைச் செலவு செய்ய வேண்டும் எனவும் குறிப்பாக உடற்பயிற்சி, விளையாட்டு உள்ளிட்ட செயல்களில் ஈடுபட வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், இப்புதிய சட்டமானது குழந்தைகளின் பாதுகாவலருக்கும் பொருந்தும் என்றும் கூறப்படுகிறது. மாணவர்களின் கல்விச் சுமையைக் குறைக்கவே, இப் புதிய திட்டத்தை சீன அரசு கொண்டு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சீனா

# உளவு பார்க்கும் பிரபல உணவகங்கள்

உலகின் மிகப் பிரபலமான உணவகங்களில் உளவு பார்க்கும் பணி இடம்பெறுவதாக 'மெக்டொனால்ஸ்' இல் பணிபுரியும் ஊழியர் ஒருவர் வெளியிட்டுள்ள செய்தி, உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

'டிக் டொக்' பயனாளரான குறித்த நபர், அண்மையில் வெளியிட்டுள்ள பதிவிலேயே இந்த இரகசியம் அம்பலமாகியுள்ளது.

குறித்த பதிவில், 'வாடிக்கையாளர்களின் மேசைக்கு வரும் உணவு பரிமாறுவோர், கவுண்டரில் உட்கார்ந்திருக்கும் ஊழியர் என யார் வேண்டுமானாலும் வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட பேச்சைக் கேட்க முடியும். அத்துடன் அனுமதியின்றி அவர்களின் புகைப்படங்களையும் எடுக்க முடியும். குறிப்பாக, 'மெக்டொனால்ஸ்' இல் நடக்கும் பணிகள் சிறப்பாக நடைபெற அனைத்து மேசைகளின் அருகிலும் சில கெமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இக் கமெராக்கள் வாடிக்கையாளர்களின் முகத்தைப் படமெடுப்பதோடு, ஊழியர்கள், வாடிக்கையாளர் பேசுவதையும் பதிவு செய்யும் எனவும் மைக் ஓஃப்(off) செய்யப்பட்டிருந்தாலும் ஊழியர்களால் வாடிக்கையாளர்களின் பேச்சைக் கேட்க முடியும் எனவும் இதன் மூலம் எந்த மேசையில் யாருக்கு உணவை வழங்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறு இருப்பினும் வாடிக்கையாளர்களுக்குத் தெரியாமலே அவர்களுடைய தகவல்கள் வெளியில் கசிவது குறித்து சமூக ஊடகங்களில் மக்கள் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்து வருகின்றனர்.



சம்பியன்ஸ் லீக்:

# அத்லெட்டிகோவை வென்ற லிவர்பூல்

## தோற்ற ஏ.சி மிலன், டொட்டமுண்ட்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிரீமியர் லீக் கழகமான லிவர்பூல் வென்றது.



லிவர்பூல் சார்பாக, மொஹமட் சாலா இரண்டு கோல்களையும், நபி கெய்ட்டா ஒரு கோலையும் பெற்றதோடு, அத்லெட்டிகோ சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் அந்தோனி கிறீஸ்மன் பெற்றிருந்தார்.

இதேவேளை, பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில், ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான ஆர்.பி லெய்ப்ஸிக்கை 3-2 என்ற கோல் கணக்கில் அவ்வணி வென்றிருந்தது. பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாக, லியனல் மெஸ்ஸி இரண்டு கோல்களையும், கிலியான் மப்பே ஒரு கோலையும் பெற்றனர். ஆர்.பி லெய்ப்ஸிக் சார்பாக, அன்ட்ரே சில்வா, நொர்டி முகியெலே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், போர்த்துக்கல் கழகமான போர்டோவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில், லூயிஸ் டயஸ் பெற்ற கோலுடன் 0-1 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சிரி ஏ கழகமான ஏ.சி மிலன் தோற்றிருந்தது.

இதேவேளை, நெதர்லாந்துக் கழகமான அஜக்ஸின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில், 0-4 என்ற கோல் கணக்கில் ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்ட் தோற்றிருந்தது. அஜக்ஸ் சார்பாக, டலி பிளைண்ட், அந்தோனி, செபஸ்டியன் ஹோலர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



அக்கரைப்பற்று இளைஞர் கழகங்களின் சம்மேளனத்துகான

# சீருடை அறிமுகம்

எம்.எல்.எஸ். மன்

அக்கரைப்பற்று இளைஞர் கழகங்களின் சம்மேளனத்துக்கான சீருடை அறிமுக நிகழ்வானது, அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். ஸமீலுல் இலாஹி தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம். எம். அன்ஷார் கலந்து சீருடையை இளைஞர்களுக்கு வழங்கி வைத்தார். கௌரவ அதிதிகளாக, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். தமீம், அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ. முபாரக் அலி, திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ. றுமைஸா, அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் எம். எம். றுக்சான் மற்றும் இளைஞர் கழகங்களின் சம்மேளன உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.




இருபதுக்கு – 20 உலகக் கிண்ணத் தொடர்:

# ஓமானை வென்ற பங்களாதேஷ்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், ஓமானின் அல் அம்ரட்டில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஓமானுடனான போட்டியில் பங்களாதேஷ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 153/10 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மொஹமட் நைம் 64 (50), ஷகிப் அல் ஹஸன் 42 (29), மகமதுல்லா 17 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிலால் கான் 3/18 (4), பயாஸ் பட் 3/30 (4), கலீமுல்லாஹ் 2/30 (4))

ஓமான்: 127/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜடின்டர் சிங் 40 (33) ஓட்டங்கள். பந்துவீச்சு: முஸ்தபிசூர் ரஹ்மான் 4/36 (4), ஷகிப் அல் ஹஸன் 3/28 (4), மஹெடி ஹஸன் 1/14 (4), மொஹமட் சைபுடீன் 1/16 (4))

போட்டியின் நாயகன்: ஷகிப் அல் ஹஸன்

இந்நிலையில், மற்றைய போட்டியி பப்புவா நியூ கினியை ஸ்கொட்லாந்து வென்றிருந்தது.

இதேவேளை, இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பப்புவா நியூ கினியை பங்களாதேஷ் எதிர்கொள்ளவுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஓமானை ஸ்கொட்லாந்து எதிர்கொள்ளவுள்ளது.






மட்டக்களப்பில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின்

# மாவட்ட இளைஞர் விளையாட்டு போட்டிகள் ஆரம்பம்

க. விஜயரெத்தினம்

மட்டக்களப்பில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 33ஆவது மாவட்ட மட்ட இளைஞர் விளையாட்டு போட்டிகள் மாவட்ட ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயல்பாடுகள் மீண்டும் மாவட்ட மட்டத்தில் நேற்று முன்தினம்(19)காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளன .

அந்தவகையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 33வது மாவட்ட மட்ட இளைஞர் விளையாட்டு போட்டிகள் மாவட்ட ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான மாவட்ட மட்ட இளைஞர் விளையாட்டு போட்டிகள் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டு தற்போது நடைபெற்று வருகின்றது. இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்பட்ட 33 வது மாவட்ட மட்ட விளையாட்டு போட்டிகள் சுகாதார நடைமுறையின் கீழ் மாவட்ட இளைஞர் உத்தியோகத்தர்கள், மாவட்ட இளைஞர் கழக சம்மேளன அங்கத்தவர்கள், விளையாட்டு வீர, வீராங்கனைகள், விளையாட்டு உத்தியோகத்தர்கள் என மட்டுப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களின் பங்குபற்றுதலுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

ஆண்,பெண் இருப்பாளர்களுக்கான கரப்பந்தாட்ட போட்டிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டு இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 21 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.